... ஓடிவந்து
... தொடங்கினார்கள்.
பிரதானமாக இருந்தார் பகலில் ஆஸ்பத்திரி
ருந்த அந்த மஃப்டி போலீஸ்காரர். அந்த
ா கிண்டல் உணர்வோடு.

ம் சாமி.. உங்க ஆசீர்வாதம் வேணும்.
வந்திருக்கேன்..'' என்றபடி கோசல் ராம்
பினார்.

—ம் ஏராள மிரளல்.

திணறிப் போனான். 'ஒருநாள் போலீஸ்
வ சிலையைக் கடத்திவந்தபோது புற்றைத்
ற்குள் சிலையைப் போட்டு மண்ணைக்
மூடி இத்தனை நாள் காவல் காத்தது
வசமாக ஒரு அர்த்த ராத்திரியில் மாட்டிக்
அன்றைய கடத்தலில் ராஜேந்தர் மட்டும்
, கோல்ராம் தப்பிவிட, லாக்கரை விட
ாக புற்றைப் கருதியது இப்படி மாட்டிக்
ப்புடன், கையில் பிடித்திருந்த பாம்பைத்
எதுவும் பேசாமல், சுற்றி வளைத்து நின்ற
க ஆரம்பித்தான்.

## முற்றும்

# ஒரே ஒரு வார்த்தை

## 1

**'பெண்ணே சக்தியின் ஆதாரம் - அவள்**
**அன்பே அனைத்திலும் மேலாகும்'**

''சீதம்மாவுக்கு இடுப்பு வலி எடுத்திடுச்சி... சீதம்மாவுக்கு இடுப்பு வலி எடுத்திடுச்சு...''

அந்த வல்லபராயர் பங்களாவே நடுங்கும்படி கத்திக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள் சேடச்சி.

பனங்காட்டூரிலேயே வல்லபராயர் பங்களாதான் அநியாயத்துக்கு பெரிசு. நாயக்கர் மகால் கணக்காக பொழுபொழுவென்றும், பளபளவென்றும் இருக்கும். (யாரோ ஒரு கோடி ரூபாய் விலைக்கு கேட்டார்களாம். கேட்ட நபரின் நாக்கை நறுக்கவே போய்விட்டாராம் வல்லபராயர்).

அப்படி ஒரு பங்களாவின் மூலை முடுக்கு எல்லாம் புகுந்து போகிறது சேடச்சியின் உற்சாகக்குரல்.

பங்களாவில் பாந்தபதமாக பாண்டியம்மாளுக்கு என்று அறை ஒன்று உண்டு. உள்ளே பாடம் பண்ணி வைத்திருக்கும் சிங்கம், புலியில் இருந்து இன்றைய நவீன தேவைகளான டி.வி., ஃபிரிட்ஜ் வரை எல்லாமே அதில் உண்டு.

மொத்த அறையையும் ஏ.சி. செய்து வைத்திருப்பதால் அறைக்கதவில் இருந்து ஜன்னல் வரை எல்லாமே இறுக்கமாக மூடித்தான் கிடக்கும்.

அதனால் அந்த அறை முகப்பில் மட்டும் செய்தி தேங்கி நின்றது.

ஆனால் அவளுக்குத்தான் விஷயத்தை முதலில் சொல்லியாக வேண்டும். உத்தரவு அப்படி!

வல்லபராயர் பங்களாவுக்கே எஜமானியும், பன காட்டூருக்கே ராணி என்றும் தன்னை சொல்லிக் கொண்டிருப்பவளுக்கு இந்த விஷயத்தைச் சொல்லா விட்டால் யார் செருப்படிபடுவது?

அதேசமயம் அவசரப்பட்டுக் கொண்டு கதவைத் திறந்து கொண்டு அறைக்குள் போவதிலும் ஆபத்திருக்கிறது.

தர்மசங்கடத்தில் அந்த பங்களாவின் வேலை, வெட்டிகள் எல்லாம் என்ன செய்யலாம் என்று தாடையைத் தேய்க்கும் போது, வலி எடுத்துக் கத்தும் சீதம்மாளின் குரல் பெரிதாகவே எல்லோர் காதிலும் விழும்படி கேட்கத் தொடங்கியது.

'சரி உதை விழுந்தாலும் பாதகமில்லை... கதவைத் திறப்போம்' என்று சேடச்சியே கதவை திறந்து கொண்டு உள்ளே போனாள்.

'சிலீர் என்று ஏ.சி. குளிர் முகத்தில் வந்து அறைந்தது. அவ்வப்போது கிட்டும் அனுபவம்தான். ஒவ்வொரு முறையும் சேடச்சி அதற்காக வியப்பாள். 'ஒரு இடத்தையே இப்படி ஜில்லென்ற வைத்துக் கொள்ள முடியுமா என்ன? ஹூம்! பணம் இருந்தால் என்ன வேண்டுமானால் செய்து கொள்ளலாமே...?'

-கேள்வியும் பதிலும் அவளுக்குள் ஒரு சில நொடிகளில் தோன்றி நுழைந்துவிடும்.

எதிரில் தெரியும் பாண்டியம்மாளின் ஆகிருதியான உருவம் சர்வத்தை அழைத்துவிடும்.



...பட்டுக்கண்டாங்கி, அள்ளி முடிந்த செருகல் ...டை, அதில் கதம்ப மலர்ச்சரம். காதில் கால் கிலோ ...க்குக் குறையாத தண்டட்டி. கழுத்திலும் ஒரு கைதியை ...ப் போடலாம். அவ்வளவு பருமனில் தங்கச் சங்கிலி. ...ருக்கே ராணி என்று சொல்லிக் கொள்பவள் பின் ...சர்க்குச்சிக்கு நூல் சேலையை சுற்றி விட்ட மாதிரியா ...ருப்பாள்?

"தாயி..." இது உள்ளே நுழைந்த சேடச்சி.

"என்னடி... எதுக்கு இப்படி இளப்பெருக்க ஓடி ...திருக்கறே?"

"நம்ம சின்ன அம்மணிக்கு வலி கண்டிருச்சு தாயி..."

"அப்படியா?"- கேட்ட ஜோரில் பாண்டியம்மாள் ...ங்கிருந்து ஒரு புயல் காற்றாட்டம் புறப்படத் தொடங்கினாள்.

ஐம்பத்தைந்து வயதாகிறது. ஆனால் இருபத்தைந்து வயதுக்காரப் பெண்ணைப் போல ஒரு வேகம். நடக்கும் போது பூமி அதிரும். பார்த்தாலும் சருகுகள் பற்றிக் கொள்ளும். அப்படி ஒரு தீட்சண்யம் மிக்க பார்வை.

பனங்காட்டூரே பாண்டியம்மாள் என்றால் நின்று திரும்பிப் பார்க்கும் போது, அவள் பங்களாவாசிகளைப் பற்றி சொல்லவா வேண்டும்.

அவள் ஒரு புயல் காற்றைப் போல புறப்பட்டு வரவும் ஒதுங்கி வழிவிட்டார்கள்.

தாவி மாடிப்படியில் ஏறினாள் பாண்டியம்மாள்.

சீதம்மாள் அறைக்குள் ஒரே பாய்ச்சலில் நுழைந்தாள். அந்தப் பெண் முணங்கிக் கொண்டிருந்தது. தலைமாட்டில் பரிதாபமாக நின்று கொண்டிருந்தாள் தேவானை. பாண்டியம்மாளைப் பார்க்கவும் புடவை முந்தியை இழுத்துவிட்டு கொண்டு பதவிசாக மாறி மரியாதையாகப் பார்த்தாள்.

''நீ இங்கையா இருக்கே?'' - தேவானையைப் பார்த்துதான் அந்த கேள்வி.

''ஆமா அத்தை...''

''சரி சரி.. உன் தங்கச்சிக்கு இதுவரை ஒத்தாசை பண்ணினது போதும். போய் களத்து மேட்டு சோலியப் பாரு. ஆமாம் மருத்துவச்சிக்கு சொல்லி உட்டாச்சா?''

வலியில் துடிக்கும் சீதம்மாவை பார்த்தபடியே தேவானையிடம் அவள் கேட்ட கேள்விக்கு சேடச்சியிடம் இருந்து பதில் வந்தது.

''தாயி... மருத்துவச்சி இப்ப ஊர்ல இல்ல. அது சாமி கும்பிட சபரி மலைக்கு போயிருக்குதாம்.''

''அது ஆம்பளைங்க மட்டும் போற மலையாச்சேடி?''

''தாயி... தீட்டு நின்னுட்டா பொம்பளைங்களும் போகலாமாம்.''

''அடக் கண்றாவியே... அப்ப மட்டும் பொம்பள சுத்தமாயிட்றாளாமா?''

- பாண்டியம்மாள் எகத்தாளமாக கேட்டபடியே குனிந்து சீதம்மாளைப் பார்த்தாள். சீதம்மாளும் வலி - முணங்கலோடு அவளைப் பார்த்தாள்.

''தாயி... டவுனுக்கு ஆஸ்பத்திரிக்கு தான் கொண்டு போகணும்'' சேடச்சி குரல் இடையீடு செய்தது.

''அது சரி.. கார் தயாராக இருக்குதுல்ல...''

''எல்லாம் தயாரா இருக்குது தாயி. கிளம்ப வேண்டியதுதான்.''

''அப்ப கிளம்புங்க...''

''தாயி... நம்ம நாயருக்கு தகவல்...''

''எல்லாம் போற போக்குல கொடுத்துக்கலாம். பாத்து கைத்தாங்கலா தூக்கிட்டு வாங்கடி...'''

- சொன்னபடியே முன்னால் செல்லத் தொடங்கினாள் பாண்டியம்மாள்.



சேடச்சியும், தேவானையும் சீதம்மாவை தொட்டுத் தூக்கத் தொடங்கினார்கள்.

பாண்டியம்மாள் முன்னால் சென்று காரில் ஏறி அமர்ந்து கொள்ள, பின்னால் சீதம்மாவோடு வந்து தேவானையும், சேடச்சியும் ஏறி அமர்ந்து கொண்டனர்.

பாண்டியம்மாள் திரும்பி தேவானையை ஒரு பார்வை பார்த்தாள்.

பார்வையா அது? அம்பு போல குத்தியது. கூடவே கேள்வி வேறு.

''ஆமா. நீ எங்கடி வரே?''

''அத்தே நானும் ஆஸ்பத்திரிக்கு...''

''எதுக்கு.. இல்ல எதுக்குன்னு கேக்கறேன். மொத மொத என் வம்சத்துக்கு நடுவாரிசு வரப்போகுது. அது மலட்டுப் பன்னி உன்னை முதல்ல பாக்கவா? இறங்குடி...''

பாண்டியம்மாளின் அதட்டலில் காரே நடுங்கிற்று. தேவானையின் கண்களில் பொலபொலவென்று கண்ணீர் பீறிடத் தொடங்கியது.

காரைவிட்டு அரைமனதாக இறங்கிக் கொண்டாள். கார் சீறிக் கொண்டு கிளம்பியது மெயின்கேட்டை கடக்கும் வரை பார்த்துக் கொண்டே நின்றாள். அவளை மற்ற வேலைக்காரர்களும் கூட பரிதாபமாகப் பார்த்தனர். சிலருக்கு அழுகை கூட வரும்போல இருந்தது. இருந்தும் அடக்கிக் கொண்டனர்.

அவளுக்காக பரிதாப்படுவது எத்தனை ஆபத்தானது என்று அவர்களுக்குத்தான் தெரியுமே?

## 2

**'ஒரு ஆணுக்கு உலகம்தான் வீடு - ஆனால் பெண்ணுக்கு வீடுதான் அவள் உலகம்!''**

களத்து மேட்டை ஒட்டி இருக்கிற ராயரின் தென்னந்தோப்பு. தோப்பை ஒட்டி ஓடிக் கொண்டிருந்தது அமராவதி ஆறு.

கணுக்கால் தண்ணி எப்போதும் ஓடியபடி இருக்கும்.

அதையும் மோட்டார் வைத்து உறிஞ்சுவதில் ராயர் கில்லாடி. அந்த தண்ணீரில் வளர்ந்த தென்னைகளுக்கும் திமிர் அதிகம்.

ஏதோ ஆகாயத்துக்கே ஒட்டடை அடிக்க கிளம்பிவிட்ட மாதிரி பேயாட்டம் போட்டுக் கொண்டிருந்தன. தென்னந்தோப்பில் தென்னையோடு சேர்ந்து மாமரமும், கொய்யாவும் கூட உண்டு.

எல்லாமே நல்ல பணக்கார மரங்கள். வளமும், கொழிப்பும் ஆனாலும் மிக அதிகம். அத்தனைக்கத்தனை பனங்காட்டூரின் மற்ற இடங்களில் எல்லாம் பெயருக்கு ஏற்ற மாதிரி பனைமரங்கள்தான்.

ஊருக்குள்ளிருக்கும் சிலருக்கும் அமராவதி ஆற்றை யொட்டி நிறைய நிலம் நீச்சு இருக்கிறது. அவர்களில் சிலரும் ராயரை பார்த்துவிட்டு அமராவதி ஆற்றில் கைவைத்தார்கள். ஆனால் மறுநாளே போலீஸ் வந்து கைது செய்து கொண்டு போய் உள்ளே வைத்துவிட்டது.

''ராயர் மட்டும் தண்ணி திருடலாம். நாங்க திருடக்கூடாதோ?'' நடுவர் நியாயம் கேட்டார்.

''ராயர் எலெக்ஷன் வந்தா எல்லா கட்சிக்கும் ஆயிரம் பத்தாயிரம் டொனேஷன் தரார். நீ என்னத்த தரே?'' - என்று பதில் கேள்வி கேட்டு அவர்களை அடக்கியது போலீஸ்.

''அப்ப காசு பணம் தந்தா எந்த தப்பு வேணா பண்ணலாமா?'' ''அப்படித்தான் வெச்சுக்கையேன்... ஆமா





...என்ன எதுத்து பேசறே. உன்மேலே கஞ்சா விக்கறேன்னு ...கேஸ் போட்டாத்தான் நீ வழிக்கு வருவே...'' - என்று ...போலீஸே வல்லபராயர் போல அவர்களில் ஒருவனை ...ரட்டவும் செய்தது.

இவ்வளவுக்கும் பிறகும் நியாயம் கேட்டுப் பாட்டும் பாடி, கம்பெடுத்து சண்டைபோட அவர்கள் ஒன்றும் ரஜினிகாந்தோ, விஜயகாந்தோ இல்லை. எதார்த்தத்தில் வாழ்க்கை நடத்தும் மிகச் சாதாரணமான சராசரி மனிதர்கள் அவர்கள்.

வாயை மூடிக்கொண்டார்கள்.

இப்படி வாயை மூடிக் கொண்டிருப்பவர்கள் இவர்கள் மட்டுமா என்ன.. இந்த நாட்டில் மெஜாரிட்டியே இவர்கள்தானே?

இதனால் பனங்காட்டூரைப் பொறுத்து ராயர் வைத்ததுதான் சட்டம். பரம்பரை பணக்காரர் என்கின்ற ஹோதாவோடு, பந்தா பகட்டுக்கும் மனிதரிடம் பஞ்சமே இல்லை.

ராயரின் கொள்ளுத் தாத்தா தாழ்ந்த சாதிக்காரர்கள் கண்ணில் பட்டாலே தலைமுழுக்கு போட்டவராம்! தாத்தா கொஞ்சம் தேவலாம் ரகம். சாதிக்காரர்கள் மேலே பட்டால்தான் முழுக்கு போட்டார்.

ராயரின் அப்பா விதிவிலக்காக வேறுபட்டு அவர்களோடு சமபந்தி போஜனமே நடத்தினார். துளிகூட தன் அப்பன் தாத்தன் புத்தி இல்லாதவராக காந்தீயவாதி யாகத் திகழ்ந்தார்.

ஆனால் ராயர் அப்பனைக் கொள்ளவில்லை.

தாத்தாக்கள்தான் அவருக்கு முன் மாதிரிகள்.

யாராக இருந்தாலும் அவர் எதிரில் கைகட்டி நின்றுதான் பேச வேண்டும். தாழ்ந்த சாதிக்காரனாக இருந்தால் காலில் செருப்பு போடக்கூடாது.

மீறிப் போட்டு சம உரிமை பேசினால் வேளை வரும்போது பேசின நபர் சரியாக நறுக்கப்படுவார்.

அன்பழகன் என்று ஒரு இளைஞன்.

ராயரை ஒரு மனிதனாகவே நினைக்கவில்லை.

அவரை வைத்து 'கொடும்பாவி' எல்லாம் கொளுத்தினான். உண்ணாவிரதமெல்லாம் இருந்தான். பத்திரிகைகள் எல்லாம் கூட அவனுக்கு வக்கலாத்து வாங்கி கட்டுரைகள் எழுதின.

அதன் எதிரொலியாக ராயரே போய் அவனிடம் சமாதானம் பேசினார். உண்ணாவிரதத்தையும் முடித்து வைத்தார்.

அதன்பின் மூன்று மாத காலத்துக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. ஆனால் ஒரு நாள் வயல் வரப்பில் பாம்பு கடித்து இறந்துகிடந்தான் அன்பழகன். நிஜமாலும் பாம்பு வந்து தானாக கடித்ததா? இல்லை ராயர்தான் பிடித்துக் கொண்டு வந்து அவன் மேலே விட்டாரா என்பது மில்லியன் டாலர் கேள்வி. நிஜமாலுமே பாம்பு கடித்து அன்பழகன் செத்திருந்தாலும் அதை நம்ப யாரும் தயாரில்லை. ராயர்தான் காரணம் என்பது ஊரின் அசைக்க முடியாத நம்பிக்கை.

ராயரும் அதைக் கேட்டு மர்மப் புன்னகை பூத்தார்.

''எப்படியோ பயந்து மறுவாதியா நடந்துகிட்டா சரி...'' என்று மீசையை நீவிவிட்டுக் கொண்டார்.

ஆனாலும் ஒரு விஷயம். அவர் மனதை குடைந்து கொண்டே இருந்தது. செத்துப் போன அன்பழகன் ஒரு சமயம் அவரைப் பார்த்து கேட்ட கேள்விதான் அது...

''ராயரே... இப்படி ஆள் அம்புன்னு பட்டாளத்து தயவோடையும், காசக் கொண்டே அம்புட்டு பேரையும் அடிச்சு விலைக்கு வாங்கறதும் ஒண்ணும் பெரிய விஷயமில்லை.

நீர் நல்ல ஆம்பளையா இருந்தா யார் தயவும் இல்லாம ஒத்தைக்கு ஒத்தை என் கூட மல்லுக்கு நில்லும். அப்பத்



தெரியும் உங்க வண்டவாளம்.'' என்று பல பேர் முன்னால் முண்டா தட்டிவிட்டான். அவன் அப்படிப் பேச காரணம் இருந்தது. தாலி கட்டிய பொண்டாட்டி ஒரு பக்கம் என்றால் தாலி கட்டாமல் வைப்பாட்டிகளாக இருந்தவர்கள் தெருவுக்கு நாலுபேர்.

ஆனால் நூறுபேர் இருந்தாலும் ஒரு பிள்ளைக்கு வக்கில்லை. இத்தனைக்கும் ராயருக்கு திருமணமாகி ஏழு வருஷம் ஓடிவிட்டது.

எதிரே நிற்க பயப்படுகின்றவர்கள் கூட தொலைவில் இந்த விஷயத்தில் சாடை பேசினார்கள்.

''ராயரு வாஸ்தவத்தில கையாலாகாத ஆள். அது வெளியே தெரிஞ்சிடாம இருக்கத்தான் ஆஊன்னா முண்டா தட்டறாரு'' என்றான் ஒருவன். எப்படியோ அது ராயர் காதிலும் எதிரொலித்தது. ஆளை விட்டு அவனை அழைத்து வரச் செய்தார். அரண்டு போனான் அவன்.

''ஆமா என்னடா சொன்னே..?''

''என்னமோ நான் ஆம்பளை இல்லேன்னு சொன்னியாமே..?''

''நான் ஆம்பளையா, பொம்பளையான்னு இப்ப பாக்கறியா?''

''இல்லீங்க.. அது வந்து...'' அவன் தொண்டை வறண்டு பேசத் தொடங்கியது. ராயர் வேட்டியை மடித்துக்கட்டிக் கொண்டு எழுந்து நிற்க ஆரம்பித்தார். பின்னாலேயே ஒரு நாலுபேர் அவருக்குச் சரியாக எழுந்து நின்றார்கள்.

ராயர் ஒவ்வொரு அடியாக போட்டு அவனை நெருங்கத் தொடங்கினார். அவர்களும், அவரைத் தொடர்ந்தனர்.

சினிமா வில்லன் போல் பெரிதாக எதையோ செய்யப் போகிறார் என்று எதிர்பார்த்தபோது நேர் எதிராக நடந்து கொள்ளத் தொடங்கினார்.

''நான் ஆம்பளைங்கறது இந்த ஊர் உலகத்துக்கு நிரூபணமாற அன்னிக்கு என்ன பத்தி பேசின உன் நாக்கை நீயே அறுத்துக்கணும். இல்லாட்டி கழுத்துக்கு மேல தலையே இருக்காது. ஞாபகம் வெச்சுக்கோ...''

-அவன் அதை கேட்டு விக்கித்துப் போனான்.

''டேய் இவனை மரியாதையா இவன் வீட்ல கொண்டு போய் விட்டுட்டு வாங்க. இவன் மேல இப்ப உங்க கைபடக்கூடாது. அதுக்கு நேரம் இருக்கு''- என்று அவன் விக்கிப்பை இரண்டால் பெருக்கினார்.

அதேபோல் அவனை அவர் சகாக்கள் வீட்டிற்கு கொண்டு போய் விட்டு வந்தனர்.

ராயருக்கு கைலாசம் என்ற ஒரு பால்ய ஸ்னேகிதர் உண்டு. அவர்தான் ராயரிடம் கொஞ்சம் தைரியமாக உரிமை எடுத்து பேச முடிந்தவர்.

ஊர்க்காரர்கள் ஒரு மாதிரி பேசுவதை கேட்ட பிறகு அவருக்கு பொறுக்கவில்லை.

''எலே ராயா... என்னவே போய் ஒரு நல்ல டாக்டரை பாக்கறதுதானே...?''

''டாக்டரையா?''

''ஆமாவே... காலம் இப்ப எவ்வளவு வேகமா போய் கிட்டிருக்கிறது தெரியுமா? பொண்டுகளாகவே இருந்தாலும் பிள்ள பெத்துக்கலாம் தெரியுமா?''

''அப்ப என்னை என்ன பொண்டுகன்னு சொல்லாம சொல்லுறியா கைலாசம்?''

''அட நீ வேற... சொல்றத சரியா புரிஞ்சுக்க ராயா.. நீயும் உன் பொஞ்சாதியும் போய் முதல்ல ஒரு நல்ல டாக்டரைப் பாருங்க. உங்ககிட்ட ஏதாச்சும் குறை இருந்தா டாக்டர் சொல்லிடுவாரு..''

''அது எனக்கு தெரியாதாக்கும்...?''



''அப்ப போறதுக்கென்ன. நீ போய் பார்த்திருந்தேன்னா இப்படி நெஞ்சுல முடியில்லாதவன்லாம் உன்கிட்ட நின்னு பேசுவானா?''

''அது சரி கைலாசம். ஆனா நான் போய் டாக்டரைப் பார்த்தேங்கறது வெளியே தெரிஞ்சிச்சின்னு வை...''

''என்ன இப்ப?''

''அடப்போவே... எனக்கே என் மேல சந்தேகம் வந்திருச்சு. அதான் நான் டாக்டருகிட்ட போய்ட்டேன்னு பேசமாட்டாங்க?''

''இதோபார்... இப்படி பார்த்துக்கிட்டே போனா எதுவுமே பண்ண முடியாது. நாம என்ன ஆதிகாலத்துலயா வாழறோம்? உக்காந்த இடத்துல ஒரு பொடி டப்பி மாதிரி ஒண்ண வெச்சுகிட்டு ஏழாயிரம் மைலுக்கு அங்கிட்டு உள்ளவங்களோட பேசலாம் தெரியுமா இப்போ?

போலே.. போய் முதல்ல நல்ல டாக்டரைப் பாரு. அப்புறம் பேசலாம்.''

. கைலாசம் இறுக்கிப் பிடித்து ராயரை டாக்டர் நோக்கித் திருப்பிவிட்டுப் போனார்.

அந்தப் பக்கமாக அவர் போயிருப்பார். இந்த பக்கமாக வந்து நின்றாள் அவரது அம்மா பாண்டியம்மாள்.

''என்னடா... கைலாசம் என்னத்த ஓதிட்டுப் போறான்.'' வெற்றிலை மென்றபடியே கேட்டாள்.

''ஒண்ணுமில்ல ஆத்தா. தேவான கழுத்துல தாலிய கட்டி ஆச்சுல்ல அஞ்சாறு வருஷம். ஒரு பூச்சி புழு இல்லையே என்ன பண்ணலாம்னு கேட்டேன். போய் டாக்டரப் பாருங்கறான்.''

''சரி.. நீ என்ன பண்ணப் போறே?'' ''என்னத்த பண்ண.. வலி வந்தா மருந்து சாப்பிட்றோம்ல? அப்படித் தான் - போய் பார்க்க வேண்டியதுதான்.''

''நான் ஆம்பளைங்கறது இந்த ஊர் உலகத்துக்கு நிரூபணமாற அன்னிக்கு என்ன பத்தி பேசின உன் நாக்கை நீயே அறுத்துக்கனும். இல்லாட்டி கழுத்துக்கு மேல தலையே இருக்காது. ஞாபகம் வெச்சுக்கோ...''

-அவன் அதை கேட்டு விக்கித்துப் போனான்.

''டேய் இவனை மரியாதையா இவன் வீட்ல கொண்டு போய் விட்டுட்டு வாங்க. இவன் மேல இப்ப உங்க கைபடக்கூடாது. அதுக்கு நேரம் இருக்கு''- என்று அவன் விக்கிப்பை இரண்டால் பெருக்கினார்.

அதேபோல் அவனை அவர் சகாக்கள் வீட்டிற்கு கொண்டு போய் விட்டு வந்தனர்.

ராயருக்கு கைலாசம் என்ற ஒரு பால்ய ஸ்னேகிதர் உண்டு. அவர்தான் ராயரிடம் கொஞ்சம் தைரியமாக உரிமை எடுத்து பேச முடிந்தவர்.

ஊர்க்காரர்கள் ஒரு மாதிரி பேசுவதை கேட்ட பிறகு அவருக்கு பொறுக்கவில்லை.

''எலே ராயா... என்னவே போய் ஒரு நல்ல டாக்டரை பாக்கறதுதானே...?''

''டாக்டரையா?''

''ஆமாவே... காலம் இப்ப எவ்வளவு வேகமா போய் கிட்டிருக்கிறது தெரியுமா? பொண்டுகளாகவே இருந்தாலும் பிள்ள பெத்துக்கலாம் தெரியுமா?''

''அப்ப என்னை என்ன பொண்டுகன்னு சொல்லாம சொல்லுறியா கைலாசம்?''

''அட நீ வேற... சொல்றத சரியா புரிஞ்சுக்க ராயா.. நீயும் உன் பொஞ்சாதியும் போய் முதல்ல ஒரு நல்ல டாக்டரைப் பாருங்க. உங்ககிட்ட ஏதாச்சும் குறை இருந்தா டாக்டர் சொல்லிடுவாரு..''

''அது எனக்கு தெரியாதாக்கும்...?''



''அப்ப போறதுக்கென்ன. நீ போய் பார்த்திருந்தேன்னா இப்படி நெஞ்சுல முடியில்லாதவன்லாம் உன்கிட்ட நின்னு பேசுவானா?''

''அது சரி கைலாசம். ஆனா நான் போய் டாக்டரைப் பார்த்தேங்கறது வெளியே தெரிஞ்சிச்சின்னு வை...''

''என்ன இப்ப?''

''அடப்போவே... எனக்கே என் மேல சந்தேகம் வந்திருச்சு. அதான் நான் டாக்டருகிட்ட போய்ட்டேன்னு பேசமாட்டாங்க?''

''இதோபார்... இப்படி பார்த்துக்கிட்டே போனா எதுவுமே பண்ண முடியாது. நாம என்ன ஆதிகாலத்துலயா வாழறோம்? உக்காந்த இடத்துல ஒரு பொடி டப்பி மாதிரி ஒண்ண வெச்சுகிட்டு ஏழாயிரம் மைலுக்கு அங்கிட்டு உள்ளவங்களோட பேசலாம் தெரியுமா இப்போ?

போலே.. போய் முதல்ல நல்ல டாக்டரைப் பாரு. அப்புறம் பேசலாம்.''

- கைலாசம் இறுக்கிப் பிடித்து ராயரை டாக்டர் நோக்கித் திருப்பிவிட்டுப் போனார்.

அந்தப் பக்கமாக அவர் போயிருப்பார். இந்த பக்கமாக வந்து நின்றாள் அவரது அம்மா பாண்டியம்மாள்.

''என்னடா... கைலாசம் என்னத்த ஓதிட்டுப் போறான்.'' வெற்றிலை மென்றபடியே கேட்டாள்.

''ஒண்ணுமில்ல ஆத்தா. தேவான கழுத்துல தாலிய கட்டி ஆச்சுல்ல அஞ்சாறு வருஷம். ஒரு பூச்சி புழு இல்லையே என்ன பண்ணலாம்னு கேட்டேன். போய் டாக்டரப் பாருங்கறான்.''

''சரி.. நீ என்ன பண்ணப் போறே?'' ''என்னத்த பண்ண.. வலி வந்தா மருந்து சாப்பிட்றோம்ல? அப்படித் தான் - போய் பார்க்க வேண்டியதுதான்.''

''பொடலங்கா... நீ எதுக்குடா டாக்டரைப் பார்க்க போவணும். போச்சொல்லுடா உன் பொஞ்சாதி மூதேவியை...''

''என்னாத்தா நீ... இரண்டு பேரும் தானே இதுக்கு பொறுப்பு. இரண்டு பேரும்போய் பாத்தாதானே குத்தம் குறை தெரியும்?''

''சரி... உன்மேல குத்தமில்லேன்னு டாக்டர் சொல்லிட்றார்னு வை. என்னடா பண்ணுவே?''

பாண்டியம்மாள் கையாட்டியபடி கேட்ட தொனியில் வியர்த்துவிட்டது ராயருக்கு...

எதுவுமே பேசமுடியவில்லை.

''என்னடா பேச்சக் காணோம்?''

''என்னத்த பேச... ஏன் ஆத்தா இப்படி எல்லாம் பயமுறுத்தறே?''

''பயமுறுத்தலடா.. உங்கப்பாரு வம்சா வளில உங்க பெரியப்பனுக்கு புழு பூச்சி கிடையாதுல்ல. அதான் அப்படி கேட்டேன். நீ பெரியப்பனை கொண்டிருந்தா?''

- பாண்டியம்மாள் சொன்னதும்தான் ராயருக்கு பெரியப்பன் ஞாபகமே வந்தது. அந்த ஞாபகம் மட்டுமா வந்தது...? கூடவே குப்பென்ற பயமும் சேர்ந்து கொண்டு வந்தது. வியர்த்துக் கொட்டிவிட்டது!

''இப்படி வேர்த்துக் கொட்டுனா ஆச்சா... யோசனையோட நடந்துக்கோ.''

''சரி ஆத்தா - என்ன பண்ணட்டும்?''

''அந்த மூதேவிய அனுப்பு. ஒரு வேளை அவளுக்கு கோளாறு இருந்தா...''

''இருந்தா?''

''அத பொறவு பார்த்துக்கலாம். முத அந்த சனியனோட போய் டாக்டரைப் பார்.''

- பாண்டியம்மாள் சனியன் சனியன் என்று சொன்ன தேவானை பயந்து நடுங்கிக் கொண்டே அவருடன்



டாக்டரைப் பார்க்கத் தயாரானாள். ஆனால் ராயர் பாண்டியம்மாளையே கூட்டிக் கொண்டு போய்வரச் சொல்லிவிட்டு நழுவிவிட்டார்.

அதன்பின்தான் அந்த அக்கிரமும் நடந்து முடிந்தது. அதுபற்றி தெரிந்து கொள்ளும் முன் கொஞ்சம் சீதம்மாவை பார்த்து விடுவோமே.

ராயர் சீட்டாடிக் கொண்டிருக்கும் தோப்புக்கு பாய்ச்சலெடுத்து வந்து நின்றான் வேலைக்காரன் ஒருவன்.

இந்த இரண்டாயிரத்திலும் ''ஆண்டே...'' என்கிற 1950-ம் வருஷத்துக்கு முந்திய வார்த்தையை பயன்படுத்தி அவர் முன் பணிவாக நின்றான்.

புகை கக்கும் வாயோடு அவரும் ''என்னடா?'' என்று கேட்க ''சின்னம்மிணிக்கு வலி கண்டிடுச்சுங்க ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிருக்காங்க. உங்கள உடனே கூட்டிக்கிட்டு வரச் சொன்னாங்க..'' என்றான்.

ராயருக்கு அடுத்த நொடியே இன்பப் பரவசமாகிப் போனது. சீட்டுக் கட்டை தூக்கி எரிந்தார். பட்டு வேட்டிச் சட்டையோடு எழுந்து நின்றார். வீரப்ப மீசையையும் ஒரு நீவு நீவிக் கொண்டார்.

சகாக்கள் ஒரு மாதிரிப் பார்த்தனர்.

''ஏலேய்... நான் அப்பனாகப் போறேண்டா. என் வம்சத்துக்கொரு வாரிசு வரப்போறாண்டா. ஊர்ல என்ன பத்தி தப்பா பேசுனவன எல்லாம் பாத்து வைய்யுங்க. நான் ஆஸ்பத்திரிக்கு போய்ட்டு வந்துட்டு அவங்களுக்கெல்லாம் வெச்சுக்கறேன்.''

ராயர் துண்டை உதறிக் கொண்டு கிளம்பினார். அந்த உதறலில் தூள் பறந்தது.

...

## 3

**'பெண்ணை மலிவாய்க் கருதாதே - அது
உன்னையே நீ மலிவாகக் கருதுவதாம்!'**

டவுனிலேயே அதுதான் பெரிய ஆஸ்பத்திரி! திரும்பின பாக்கமெல்லாம் மார்பிளில் இழைத்திருந்தார்கள். சென்ட்ரலைஸ்டு ஏ.சி. வேறு.

பாண்டியம்மாளும் சீதம்மாளும் காரில் அங்கு வந்து சேர்ந்த மறு நொடியிலேயே நர்ஸ்கள் ஓடிவந்து கைத்தாங்கலாக அழைத்துச் செல்லத் தொடங்கினர். இருந்தும் சேடச்சிதான் பிரதானமாக சீதம்மாவை தாங்கிக் கொண்டாள்.

வலி பின்னி எடுத்துக் கொண்டிருந்தது. ''அப்படித்தான் இருக்கும். இந்த வலியைப் போல நூறு வலியப் பார்த்தவ நான். தாங்கிக்கடி'' என்று கட்டளையாட்டம் குரல் ஒலிக்கத் தொடங்கியது பாண்டியம்மாளிடம்.

சொன்ன ஜோரோடு இடுப்பு சுருக்குப் பைக்குள் இருக்கும் வெற்றிலையை எடுத்து சுண்ணாம்பு பூசி நடந்தபடியே தாம்பூலம் போடத் தொடங்கிவிட்டாள்.

வெற்றிலைக் காம்பு சுத்தமான ஆஸ்பத்திரி பிரிவில் அவளால் விட்டெறியப்படவும்,

நர்ஸ் ஒருத்தி அதை கவனித்து விட்டு ''இது ஆஸ்பத்திரி.. இங்க இப்படி குப்பை எல்லாம் போடக் கூடாது'' என்றாள் தீர்க்கமாக.

பாண்டியம்மாளிடம் இதுவரை யாரும் இப்படி அதட்டலாக பேசியது கிடையாது. பேசினால் அவளிடமிருந்து தப்பவும் முடியாது.

பாண்டியம்மாள் நின்று ஒரு முறை முறைத்தாள். ஆனால் அந்த நர்ஸ் கவனிக்கவேயில்லை. சீதம்மாவை வார்டில் அட்மிட் செய்து மேற்கொண்டு ஆகவேண்டியதை பார்க்கத் தொடங்கிவிட்டாள்.



சேடச்சி தான் அந்த வெற்றிலைக்காம்பை எடுத்து குப்பைத் தொட்டியில் போட்டாள்.

இதை வார்டு பாய் ஒருவனும் பார்த்துக் கொண்டிருந்தான். நொச்சு நொச்சு என்று வெற்றிலையை அதக்கும் பாண்டியம்மாளை நெருங்கி வந்தான்.

''இது ஆஸ்பத்திரிம்மா... இங்கு இப்படி வெத்தல போட்டா என்னம்மா அர்த்தம்?'' கேட்டான்.

''எந்த ஊர்லடா வெத்லபாக்கு போட்றது தப்புன்னு போட்டுருக்கு. எடுபட்ட பயலே...?'' பாண்டியம்மாள் சீற ஆரம்பித்தாள்.

''இதோ பாருங்கம்மா.. இது சுத்தமான ஆஸ்பத்திரி இங்க சுத்தமாவும் மரியாதையாவும் நடந்துக்கணும். மீறுனா தூக்கி வெளிய எறிஞ்சிடுவோம்.''

''எங்க... எறிடா பார்க்கலாம் - நாயே. என்ன யாருன்னு நினைச்சே? கோடீஸ்வரிடா நான். உன்னப் போல பிச்சக்காரன் இல்ல.''

வார்த்தைகள் தவிக்கத் தொடங்கின. ஆஸ்பத்திரியே திரும்பிப் பார்க்க ஆரம்பித்தது. டாக்டர் ஒருவரும் ஓடி வந்தார்.

சீத்தம்மாவுக்கு எதுவும் தெரியாது. அவளை பிரசவ வேதனை பின்னி எடுத்துக் கொண்டிருந்தது. சேடச்சிதான் ஆறுதலாக உடனிருந்தாள்.

சீதம்மா ஏக்கமாக கேட்டாள்.

''சேடச்சி... அக்கா எங்க?''

''அத ஏன் தாயி கேக்கறே? பெரியாத்தா வர வேண்டாம்னு சொல்லிடிச்சு...''

''சேடச்சி எனக்கு ரொம்ப பயமா இருக்குடி.''

''பயப்படாதீங்கம்மா. எல்லாம் நல்லபடியா நடக்கும்.''

''ஆமா அவரு எங்கே?''

''யாரு... உங்க வூட்டுக்காரரா?''

''ஆமா..''

''தெரியல தாயி. வந்துடுவாரு - நீங்க கவலைப் படாதீங்க...''

''சேடச்சி எனக்கு யார் இல்லாட்டியும் பரவால்ல, என் அக்கா என் கூட இருந்தா போதும் சேடச்சி.''

''என்ன தாயி பண்ணட்டும். அவங்களத்தான் கண்டாலே பெரியதாயிக்கு ஆவமாட்டேங்குதே?''

''இல்ல சேடச்சி... எப்படியாச்சும் எங்க அக்காவை கூட்டிகிட்டு வா. அவளுக்காகத் தான் நான் இந்த குழந்தையையே வயித்துல சுமக்கறேன். அவதான் சாமி. அவதான் என் குழந்தையை முதல்ல பார்க்கணும். அவ கை தான் முதல்ல என் குழந்தை மேல படணும்.''

''சின்னதாயி... என்ன தாயி இது? உங்க வூட்ட பத்தி தான் உங்களுக்குத் தெரியுமே...''

''இதோபாரு.. எனக்கு இப்ப நீ இந்த சகாயத்தை செய்வியா மாட்டியா?''

''சரிதாயி.. நீ கொஞ்சம் சமாதானமா இரு. நான் பாத்துக்கறேன்.''

சேடச்சி சீதம்மாவை சமாதானம் செய்யும் போதே டாக்டர் கஸ்தூரியின் வருகை அங்கே நிகழ ஆரம்பித்தது.

மிக சிறிய வயதில் பெரிய பொறுப்புக்கு வந்துவிட்ட மாதிரி ஒரு தோரணை. காட்டன் சாரிதான் உடுத்தியிருந்தாள். ஆனால் அதிலேயே காஞ்சிபுரம் பட்டை எல்லாம் ஓரம் கட்டிவிட்ட ஒருவித ஒழுங்கு இருந்தது.

சீதம்மாவை நெருங்கியவள் மிக வாஞ்சையாக குனிந்து தலையை வருடி விட்டாள்.

''கவலப்படக்கூடாது.. தைரியமா இருக்கணும் நான் இருக்கேன்.''



மூன்றே வார்த்தைகள். சொன்ன விதமும் முறையும் சீதம்மாளுக்கு அந்த வலியிலும் மிக இதமாக இருந்தது.

''எனிமாக்கு இம்மீடியட்டா அரேஞ் பண்ணுங்க'' சொல்லிவிட்டு விலகப் பார்த்தவள் கரத்தை சீதம்மாள் இழுத்துப் பிடித்தாள்.

''என்னம்மா..?''

''டாக்டர் எனக்கு நல்லபடியா குழந்தை பொறந்துடும் தானே?''

''அடடா... உனக்கு ஏன் இவ்வளவு சந்தேகம்?''

''பயமா இருக்கு டாக்டர்.''

''முதல் பிரசவம் இல்லியா... அதுதான் டோன்ட் ஒர்ரி. ஐ வில் டேக் கேர்...''

திரும்பவும் அவள் தலையை கோதி விட்டாள் கஸ்தூரி. மிக இதமாக இருந்தது. அதே சமயம் வெளியே பாண்டியம்மாள் குரலும், ஆஸ்பத்திரி ஊழியர்களின் குரலும் பெரிய சண்டைக் குரலாக கேட்கத் தொடங்கியது.

''ஆமா வெளிய என்ன சத்தம்?'' டாக்டர் கஸ்தூரியின் கேள்விக்கு உடனிருந்த நர்ஸ் பதில் சொல்லத் தொடங்கினாள்.

''அது வந்து டாக்டர்... இவங்கள அட்மிட் பண்ண வந்த ஒரு லேடி ரொம்ப அடமண்டா நடந்துக்கறாங்க...''

''அடமண்டான்னா...?''

''அவங்க வீட்ல இருக்கற மாதிரி இங்க இருக்கப் பாக்கறாங்க. பேச்சுலையும் ஒரே அதிகாரம்.''

''ஐ. சீ.'' கஸ்தூரி அமைதியோடு சப்தம் வந்த பக்கம் நடக்கத் தொடங்கினாள்.

''டாக்டர்...'' சீதாம்மாவின் குரல் தடுத்தது. திரும்பிப் பார்த்தாள் கஸ்தூரி.

''அவங்க என் மாமியார் தான்...''

''அப்படியா?''

''கொஞ்சம் சத்தமா பேசுவாங்க. மத்தபடி ரொம்ப நல்லவங்க'' ''ஐ.சீ!''

''அவங்கள எதுவும் சொல்லிடாதீங்க...''

சீதம்மாவின் கரங்கள் கூம்பத் தொடங்கின.

''டோண்ட் ஒர்ரி... நீங்க இப்படி இப்படி எல்லாம் கண்டதுக்கும் கவலப்படக்கூடாது. ஐ வில் டேக் கேர்... அமைதியா இருங்க.''

''நர்ஸ்... இவங்கள ஏ.சி. வார்டுக்கு மாத்துங்க. எனிமா ஃபாஸ்ட்!'' கஸ்தூரியிடம் நறுக் நறுக் என்று முடிவுகள் வெளிப்பட்டன.

அந்த வார்டில் வெளிச் சப்தங்கள் கேட்பது தாய்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று நொடிப் பொழுதில் உணர்ந்து ஏ.சி. வார்டுக்கு மாற்றச் சொன்னதை நர்ஸ் க்ஷணத்தில் புரிந்து கொண்டாள்.

சேடச்சி கலங்கி விட்டிருந்தாள்.

''சின்னத்தாயி... உங்களுக்கு ஆனாலும் பெரிய மனசு.''

சொன்னபடியே கண்கலங்கினாள். அவளுக்குத்தானே தெரியும் பாண்டியம்மாள் என்னும் ராட்சஸியைப் பற்றி.

அந்த நிலையிலும் சேடச்சிக்கு நினைவுகள் பின்னோக்கி ஓடத் தொடங்குகின்றன!

## 4

**'பெண்ணே பெண்ணுக்கு பகையானால்**
**மண்ணில் மழைத்துளி வீழ்ந்திடுமோ?'**

சேடச்சியின் அப்பன் கண்ணாயிரம் ஒரு சரியான தண்ணி வண்டி. மனிதன் நாகரீகத்தால் சக்கரத்தை கண்டு பிடித்தான். பின் மின்சாரத்தை கண்டுபிடித்தான். ரேடியோ, தொலைபேசி என்று ஒவ்வொன்றாக கண்டுபிடித்தான்.



இதில் எவன் கண்டுபிடித்தானோ இந்த சாராயத்தை? அவனுக்கு ஏழெழு ஜென்மத்திற்கும் சத்தயமாக நல்ல கதியே கிட்டப் போவதில்லை.

குடிச்ச தண்ணி இல்லாத ஊரிலும் கூட இந்த போதை வஸ்து பொங்கிப் பிரவாகிப்பதை என்னவென்று சொல்வது?

இதற்கு வசப்பட்ட ஒருவன் மீளவே முடியாதோ கண்ணாயிரத்தைப் பார்த்தால் அப்படித்தான் தெரிந்தது.

ஒழுங்காக வயல் வேலைக்கு போய்வந்து கொண்டிருந்தவனை ஒரு கண்ணாடி தம்ளர் மூலமாக வந்து கவ்விய இது முதலில் கண்ணாயிரத்தின் வேலையை முழுங்கியது.

பின் வரிசையாக ஆடு, மாடு, அண்டா, குண்டா என்று அடகில் விழத் தொடங்கியது.

இதையெல்லாம் பார்த்து நெஞ்சு வெடித்தே செத்துப் போனாள் கண்ணாயிரத்தின் மனைவி கனகம்.

அப்போது சேடச்சிக்கு வயது ஆறு.

முதல் வகுப்பு படிப்பதற்காக ஊரின் திண்ணை பள்ளிக்கூடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

கூடவே அவளது தம்பி முருகனும்...

இரண்டு பேரும் இரட்டைப் பிறவிகள்!

இப்படி இவர்கள் பிறந்தபோதே 'நீலன் நீலி' பிறந்து விட்டதாக ஒரு கதை சொல்லத் தொடங்கிவிட்டது ஊர்.

கிராமமாயிற்றே... கதைகளுக்கா பஞ்சம்?

ஒரு பெண்ணுக்கு ஆணும், பொண்ணுமாக இரட்டை குழந்தைகள் பிறந்தால் அது பெற்றவர்களுக்கு ஆகாதாம்.

அப்படிப் பெற்றெடுத்ததில் ஒன்றை விற்று விட வேண்டும் என்று சாஸ்திரம் சொல்கிறதாம்?

கனகம் போய்ச் சேர்ந்தவுடன் கண்ணாயிரம் இதை காரணமாக பிடித்துக் கொண்டான். தன் குடிப்

பழக்கத்திற்கும் காரணம் இந்த இரட்டைக் குழந்தை தான் என்று கூசாமல் சொன்னான்.

இப்படி ஒரு கதையை தன் குழந்தைகள் மேல் சொல்வான் என்று கனகம் எதிர்பார்த்திருக்க மாட்டாள். எதிர்பார்த்திருந்தால் உயிரை விட்ருக்க மாட்டாளோ என்னவோ?

''எழவெடுத்த நாயுங்களா... உங்களுக்கு படிப்பு தான் கசக்குதாக்கும்?'' என்று அந்த பிஞ்சுகளை எட்டி உதைத்தான்.

விஷயம் பாண்டியம்மாள் வரைக்கும் போனது.

கண்ணாயிரத்தை கூப்பிட்டு விட்டாள்.

''எலேய்... என்னலே அந்த பிஞ்சு மக்களைப் போட்டு வறுத்தெடுக்கிறியாம்ல?''

''அட என்னாத்தா நீ.. பாவி மக்க இவுக பொறந்ததுல இருந்து தான் என் நிம்மதியே போச்சு...''

''சரி என்னப் பண்ணப் போறே?''

''என்னத்த பண்ண இரண்டு பேரையும் ஆடு மாடு மேய்க்க அனுப்ப வேண்டியது தான்...''

''அதுக்கு என் பண்ணைக்கே வேலைக்கு அனுப்பு.''

''ஆத்தா...''

''என்னடா ஆத்தா பாத்தானுக்கிட்டு. நீ கணக்கு பிள்ளைகிட்ட காசும் வாங்கியிருக்கே போல தெரியுதே?''

''அது வந்து ஆடு மாட வெச்சுத்தான் ஆத்தா...''

''அதெல்லாம் தான் வட்டிக்கே சரியாப் போச்சே.''

''ஆத்தா...!''

''என்னடா ஆத்தா ஆத்தான்னு பெத்தவளை கூப்புட்ற மாதிரி கூப்பிட்டுகிட்டு... போய் உன் இரண்டு பசங்களை அனுப்பு. நீ கடன் கட்டற வரை அவங்க என் பண்ணலை வேலை பாக்கட்டும். இல்ல முடியாதுன்னா சொல்லு ஒரு விலை போட்டு நான் வாங்கிக்கறேன்...''



''ஆத்தா..''

''பார்றா... திரும்ப ஆத்தான்னுகிட்டு இந்த நிமிஷம் நீ அஞ்சாயிரம் தர வேண்டியிருக்கு. அது உன் பையனுக்கு... மேக்கொண்டு ஒரு அஞ்சாயிரம் தரேன் வாங்கிகிட்டு உன் பொண்ணையும் என் பண்ணைல விட்டுட்டு அத வெச்சு பொழைக்கப்பாரு... நாளைக்கே பத்தாயிரம் ரூவாயோட வந்தா இரண்டு மக்களையும் அனுப்பிட்றேன்.''

''நெசமாவா?''

''நான் அரச வம்சத்துல வந்தவடா... என்னிக்கு பேச்சு மாறியிருக்கேன் நாயே...'' அதட்டினாள் பாண்டியம்மாள். அதில் பொத்தேல் என்று விழுந்தான் கண்ணாயிரம் அஞ்சாயிரம் கை மாறியது.

சுதந்திர இந்தியாவில் கொத்தடிமைகளாக இரண்டு இளம் பிஞ்சு உயிர்கள் இடம் மாறின.

அதன்பின் கண்ணாயிரம் அவர்களை மீட்க வரவேயில்லை. குடித்தே செத்துப் போனான். செத்தவனுக்கு கொள்ளி போடக்கூட மக்களை பாண்டியம்மாள் அனுப்பவில்லை.

அனாதைப் பிணம் போல ஊர் அவனைக் கொண்டு போய் புதைத்தது.

அப்போது சேடச்சிக்கும், முருகனுக்கும் இருந்தால் பத்து வயதிருக்கலாம். அழக்கூட தெரியவில்லை.

இது ஆனாலும் அநியாயம்...! என்று சிலர் கருத்து கூறினார்கள்.

அவர்களை கூப்பிடனுப்பி பேசினாள் பாண்டியம்மாள்.

''எதுவே அநியாயம்...? பிச்சை எடுத்துத் திரிய வேண்டிய இரண்டு பிஞ்சுங்களுக்கு நான் வேலை போட்டுக் கொடுத்து சோறு போட்றதா?'' என்ற திருப்பிக் கேட்டாள்.

அவர்கள் திருதிருவென முழித்தார்கள்.

''இப்பக்கூட கெட்டுப் போயிடலை. வட்டியும் முதலுமா லட்சத்து இருபதாயிரம் வருது. கொடுத்துப் போட்டு இரண்டு பேரையும் பத்திக்கிட்டு போவே. அதை உட்டுப்போட்டு நியாயம் பேசறேன். தர்மம் பேசறேன்னே... கண்ணு முழிய என் மகனை விட்டே தோண்டி விடுவேன்'' என்றாள்.

அதன்பின் யாருக்கும் அவளை எதிர்த்துப் பேச திராணியே இல்லாமல் போய்விட்டது.

பரிதாபப்படுகிறவர்கள் இன்றும் முருகனுக்கும் சேடச்சிக்கும் சொல்லும் ஒரு வார்த்தை.

''பாவம்... எல்லாம் அதுங்களோட தலை எழுத்து...'' என்பது தான்!

தலை எழுத்துதானா?

## 5

**வாய்மையினும் பெரியது தாய்மை - அதை**
**கோயிலாகக் கொள்வதே பெண்மை**

வல்லபராயர் தன் புதிய டாடா சுமோவில் பரிவாரங்கள் சூழ வந்த போது ஆஸ்பத்திரி ரிசப்ஷனில் ஒரு காவல்காரனைப் போல குறுக்கும் நெடுக்கும் நடந்தபடி இருந்தாள் பாண்டியம்மாள்.

''ஆத்தா...''

''எலே.. வாலே... வா! வா!''

''என்னாச்சு ஆத்தா... புள்ள பொறந்துடிச்சா?''

''எங்கடா.. சரியான கொழுப்பெடுத்த ஆஸ்பத்திரியா இருக்குது இது. நான் இங்க வந்ததுல இருந்தே இங்க நிக்காதே அங்க உக்கராதேன்னு ஒரேடியா அதிகாரம் பண்றாங்க.''

''நான் ஒண்ணு கேட்டா நீ ஒண்ணு சொல்றியே.''



''அதான் புள்ள பொறந்துருந்தா சொல்லி இருப்பேன்ல?''

''அப்ப எப்ப பொறக்குமாம்?''

''தெரியில... நீயே போய் கேளு.''

பாண்டியம்மாள் விட்டேத்தியாக பேசினாள்.

ராயர் திபுதிபுவென்ற உள்ளே நுழைய பார்த்தார். கையில் சிகரெட் துண்டு இருந்தது.

அதை ஒருவர் பார்த்து விட்டு தடுத்தான்.

''சிகரெட்ட வெளிய போட்டுட்டு வாங்க.''

அவனை ஒரு குத்துப்பார்வை பார்த்தது ராயரின் கண்கள். உடன் வந்திருந்த எடுபிடிகள்.

''ஏய்ய்... யார்கிட்ட பேசற தெரியுமா நீ?''

என்று உடனே ஒரு எகிறு எகிறினர். அவன் உடனே 'No Smoking' போர்டை காட்டினான்.

''என்னடா - போர்டைக் காட்றே - அதுல என்ன எழுதியிருக்குன்னு யாருக்கு தெரியும்?''

சகாக்களின் எகிறலை ராயர் ஒரு பார்வையாலேயே அடக்கி விட்டு பதவிசாக நடந்து டாக்டரின் அறை நோக்கி நடக்கலானார்.

உள்ளே ஒரு பேஷண்ட்டை பார்த்துக் கொண்டிருந்தார் டாக்டர் கஸ்தூரி.

தோரணையாக ராயர் வரவும் நிமிர்ந்தாள்.

''இங்க நீங்கதான் டாக்டர்ரா?''

''யெஸ்.. நீங்க?''

''சீதா என் சம்சாரம். இப்படி எப்படி இருக்குறா?''

''அதான் உங்க அம்மாகிட்ட சொல்லி இருந்தேனே... அவங்களுக்கு எனிமா கொடுத்திருக்கோம். எப்ப வேணா கொழந்த பிறக்கலாம்.''

''எப்ப வேணான்னா?''

''நீங்க என்ன கேக்கறீங்க...?''

''அட என்ன டாக்டர் நீங்க. சரியா நேரத்தச் சொல்லுங்க.'' ராயர் குரலில் கொஞ்சம் ரௌத்ரம்.

''அப்படி எல்லாம் சொல்ல முடியாது. உங்க மனைவி விஷயம் கொஞ்சம் காம்ப்ளிகேடிவாவும் இருக்கும் போல இருக்கு...''

''தமிழ்ல சொல்லுங்க''

''அதாவது கொஞ்சம் சிக்கலாவும் இருக்குன்னேன்.''

''என்ன சிக்கல். அவ வாந்தி எடுத்த நாள்ல இருந்து அவள நாங்க நடக்கவிடலை. ஆப்பிளும் ஆரஞ்சும் குளுகோசுமா அவள தாலாட்டியிருக்கோம். குங்குமப்பூ மட்டுமே ஒரு கிலோ கொடுத்துருக்கேன்.'' ராயர் அதிக பட்ச எதிர்பார்ப்பில் எதார்த்தம் தெரியாமல் பேசுவதை புரிந்து கொண்ட கஸ்தூரிக்கு சில வினாடிகள் என்ன பதில் சொல்வ தென்றே தெரியவில்லை. மௌனித்தாள்... கூடவே சிரித்தாள்.

''எதுக்கு சிரிக்கிறீங்க. என் கேள்விக்கு பதிலச் சொல்லுங்க.''

''என்னத்த சொல்ல.. பிரசவம்ங்கறது நீங்க நினைக்கற மாதிரியெல்லாம் இல்லை.

அதுக்கெல்லாம் உடம்புவாகுன்னு ஒண்ணு உண்டு.''

''சரி சரி.. கிராமத்தான் தானேன்னு எதையாவது சொல்லாதீங்க. இந்த டவுன்லயே பெரிய ஆஸ்பத்திரின்னு தான் இங்க வந்துருக்கோம். எனக்கு செலவப் பத்தி எல்லாம் கவல இல்லை.

என் வாரிசு நல்ல விதமா பொறக்கணும்.''

''டோன்ட் ஒர்ரி... நீங்க வெளியே போய் வெயிட் பண்ணுங்க. ஐ வில் டேக் கேர்.''

''அப்படின்னா..''

''நான் பார்த்துக்கறேன்னேன். ஆமா அந்த பொண்ணோட அம்மாவோ அக்காவோ யாராச்சும் இருக்காங்களா?''



''அவங்க எதுக்கு...''

''இல்ல.. இந்த மாதிரி சமயத்துல உங்களோட அவங்களும் இருந்தா நல்லா இருக்கும்.''

''எங்கம்மா தான் இருக்குதில்ல...?''

''நீங்க புரிஞ்சுக்கமா பேசறீங்க. ஒரு பெண்ணுக்கு இந்த மாதிரி சமயத்துல மருந்து மாத்திரையை விட அனுசரணையும் அன்பும் தான் ரொம்ப முக்கியம்.''

''அப்ப எங்கம்மாகிட்டே அது இல்லேங்கறீங்களா?''

''சாரி மிஸ்டர் - நீங்க கொஞ்சம் வெளிய போய் இருங்க. நான் அப்புறமா உங்களை கூப்பிடறேன்.''

''இதோ பாருங்க டாக்டரம்மா.. சீதாவோட அப்பன் ஒரு மொடமசுர் பிடிச்சவன். அவளுக்கு அம்மால்லாம் இல்ல. அதான் நாங்களே பிரசவம் பார்க்கறோம். புரிஞ்சுக்குங்க. என்ன மருந்து வேணும்னு கேளுங்க... அது லட்ச ரூபான்னாலும் வாங்கிட்டு வரேன்... அப்பன் ஆயின்னு இல்லாததை கேக்காதீங்க.''

''நீங்க என்ன சொல்றீங்க... அவங்க தேவானை தேவானைன்னு சொல்றது அப்ப யாரை?''

''அவ என் மூத்த சம்சாரம்...''

கஸ்தூரிக்கு அடுத்த நொடி கொஞ்சம் நெஞ்சைக் கரித்தது. இது அவள் எதிர்பார்த்திராத பதில்.

''என்னா...இப்ப அவ இருக்கணுமா இங்க?''

''ஆமா...''

''அவளுக்கு எங்கமாவை விட அவ அக்காதான் ஒசத்தியா போய்ட்டாளாமா? சரி சரி... இப்பவே போய் கூட்டிகிட்டு வர ஆளனுப்பறேன். புள்ள மட்டும் நல்லா பொறக்கல...''

ராயர் இறுதியாக கேட்ட விதத்தில் ஒரு எச்சரிக்கை ஒளிந்திருந்தது.

விறு விறுவென்று வெளியேற ஆரம்பித்தார் அவர். கஸ்தூரி சோர்ந்து போகத் தொடங்கினாள். நர்ஸ் ஒருத்தி மெல்ல உள்ளே வந்தாள். நிமிர்ந்து பார்த்தாள் கஸ்தூரி.

''எனிமா கொடுத்துட்டோம் டாக்டர். வலி சட்டுன்னு விட்டுப் போச்சுங்கறாங்க.''

''இஞ்ஜெக்ஷன் போட்டீங்களா?''

''உங்க கிட்ட கேட்டுட்டு போடலான்னு...''

''போட்றுங்க. அரை மணி நேரத்துல வலி எடுக்கலன்னா சிசேரியனுக்கு ஏற்பாடு செய்யுங்க.''

''ஓ.கே. டாக்டர். அவங்க வார்த்தைக்கு வார்த்தை தேவானை, தேவானைங்கறாங்க.''

''என்ன பண்ணலாம்... நான் என்ன தேவானையை என் ஹேண்ட் பேக்லையா வெச்சுருக்கேன்...''

''இல்ல டாக்டர் அது வந்து...''

''போம்மா.. போய் வேலையை பாருங்க. இப்பதான் அவ புருஷன் வந்து மிரட்டாத குறையாக பேசிட்டு போயிருக்காரு. சொல்லி அனுப்பியிருக்கேன்...''

''சாரி மேடம்... நானும் கேட்டுகிட்டுதான் இருந்தேன். காசு பணமிருந்தும் பேச்சுல கொஞ்சம் கூட கல்ச்சர் இல்ல...''

''சரி சரி அந்த ஆராய்ச்சி எல்லாம் நமக்கு எதுக்கு? அப்புறம் அதை கேட்டுட்டு அந்த ஆள் அதுக்கு ஒரு லெக்சர் கொடுக்கப் போறான். போங்க போய் இஞ்ஜெக்ஷன் போட ஏற்பாடு பண்ணுங்க.''

கஸ்தூரி அலுத்துக் கொண்டாள்.

நூற்றுக்கணக்கில் பிரசவம் பார்த்திருக்கிறாள். ஆனால் சீதாம்மாளின் அனுபவம் புதிதாக இருந்தது.

எப்படித்தான் இந்த பெண் இந்த ஆளுக்கு வாழ்க்கைப் பட்டாளோ?



கேள்வி பெரு மூச்சோடு உள் ஓடியது. கச்சிதமாக எதிரில் வந்து நின்றாள் சேடச்சி.

''என்னம்மா...?''

''தேவானக்காவுக்கு சொல்லி விட்டீங்கன்னு கேள்விப்பட்டேன்.''

''ஆமாம். அது சரி அவங்க ஏன் கூடவே வரலை. ஏதாவது சண்டையா?''

''ஐய்யய்யோ... அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. அவங்க இப்ப பங்களால தான் இருக்காங்க. உடம்பு தான் அங்க இருக்குது. உசுர் இங்கதான் இருக்கும் அவங்களுக்கு...''

''அப்ப ஏன் வரலை?''

டாக்டர் கஸ்தூரியின் கேள்வி முன் சேடச்சி சுற்றுமுற்றும் ஒரு பார்வை பார்த்துக் கொண்டாள்.

இமை இரண்டும் படபடத்தது.

அவள் பதில் சொல்ல பயப்படுகிறாள் என்பது துல்லியமாக தெரிந்தது.

''என்னம்மா... சொல்ல பயப்பட்ற மாதிரி தெரியுதே?''

''ஆமாம்மா.. என்ன இருந்தாலும் நான் அந்த வீட்டோட அடிமை தானே? அடிமை குடும்ப விசயம் பேசலாங்களா?''

''அடிமையா... என்ன புதிர் போட்றே நீ...''

''உண்மைம்மா... எங்கப்பன் ஒரு குடிகாரன் பெரிய வீட்ல கடன் வாங்கி குடிச்சிச்சு. கடனை திருப்பிக்கட்ட துப்பில்லை. பணத்துக்கு பதிலா எங்களை கொடுத்து கணக்க நேர் பண்ணிடிச்சு...''

''நீங்கன்னா... இன்னும் யாரு?''

''நானும் என் தம்பி முருகனும்.''

''மை குட்நெஸ். நீ சொல்றதெல்லாம் உண்மையா?''

''அம்மா மொள்ள பேசுங்க... நான் சொல்றது சத்யம். நானும் என் தம்பியும் இவ்க பண்ணைல சம்பளம் வாங்காத

கூலிங்க. எப்படிம்மா நான் சீதம்மா விவகாரத்தை பேச முடியும்?''

''இதோபார்.. நம்ம இருக்கறது சுதந்திர நாட்டுல. நீ சொல்றத எல்லாம் பார்த்தா பயங்கரமா ஏதேதோ இருக்கும் போல தெரியுதே...''

''ஆமாம்மா... சீதம்மாக்கு நடந்த பயங்கரம் மாதிரி உலகத்துல யாருக்குமே நடக்காது. அது எவ்வளவு பாவம்மா நான்லாம் தேவலாம்..''

''இதோ பார்.. நீ பீடிகை போடாம நேரா எல்லாத்தையும் சொல்லு. இவங்கள்ளாம் ஏன் இப்படி காட்டு மனுஷங்க மாதிரி நடந்துக்கறாங்க.''

''என்னம்மா பண்ண.. அவங்கல்லாம் ஆண்ட பரம்பரையாம். அப்படித்தான் நடந்துக்குவாங்க.''

''மண்ணாங்கட்டி... எந்த நாட்டுக்கு இவர் ராஜாவா இருந்தாரு. நான்சென்ஸ்.''

''அப்படி சொல்லாதீங்கம்மா.. பனங்காட்டூர் ஜமீன்னாதான் எட்டு திக்கும் விட்டுத்தெறிக்குமே...?''

''இதோபார்.. இதெல்லாம் அந்த காலம். இப்ப சட்டம் எல்லோருக்குமே பொது. மனுஷனை மனுஷனா மதிக்கனும். மனிதாபிமானம் தான் இந்த உலகத்துலையே ரொம்ப பெரிய விஷயம் தெரிஞ்சுக்கோ...''

''என்னமோம்மா நீங்க என்னென்னமோ சொல்றீங்க அவுகளுக்கு காசும் பணமும்தான் பெரிசு. எல்லாத்தையுமே விலைக்கு வாங்கிட முடியும்கறது தான் அவுக நினைப்பு.''

''சரி. பளிச்சுன்னு பதில் சொல். தேவானைக்கும் இவங்களுக்கும் என்ன பிரச்சினை.''

''அதுக்கு குழந்தை பொறக்காதாம்ல?''

''அப்படின்னு யார் சொன்னது...?''

''இதே டவுன்ல உங்கள மாதிரி ஒரு டாக்டர் தான்.''



''அதனாலதான் அவங்க தங்கச்சியான சீதம்மாவை கல்யாணம் பண்ணிக்கிட்டாரா?''

''ஆமாம். அது பாவம் சந்திரன்னு ஒருத்தனை மனசார காதலிச்சுக்கிட்டுருந்துச்சு. இந்த பெரிய ஐய்யாக்கு அது பொறுக்கல. அது ஒரு பெரிய சோகக்கதைம்மா...''

சேடச்சி தன்னையும் மீறி கலங்கினாள். அவளையும் மீறி நினைப்பு பின்னோக்கி ஓடத் தொடங்கியது.

## 6

**'மாதராய் பிறந்திடவே மாதவம் செய்திருக்க வேண்டுமாம் தவறு அது... 'பாதகம்'தான் மாதவம் என்று மாறிவிட்டது.'**

தன் மூத்த மகளை ஒரு பெரிய ஜமீனின் வம்சா வழிக்கு கட்டிக் கொடுத்திருப்பதாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தார் ஆதிகேசவர்.

ஆனால் அடிக்கடி அவள் அழுது கொண்டு வந்து நிற்பதைப் பார்க்கும் போதெல்லாம் அடிவயிறு நெருப்பாகியது.

சீதம்மா, அப்பொழுதுதான் காலேஜில் நுழைந்திருந் தாள். ஒரு பத்திரிகை மாணவ நிருபர் திட்டத்திலும் சேர்ந்திருந்தாள்.

தேவானை அழுது கொண்டு வந்து நிற்கும் போதெல்லாம் கோபம் கோபமாக வரும்.

''எதுக்காக இப்படிக் கண்ணைக் கசக்கறே? இப்ப என்ன நடந்துடுச்சின்னு அழறே...''

''என்னடி நடக்கணும், ஒவ்வொரு பொண்ணுக்கும் கல்யாணம் ஆகறது தான் பெரிய விஷயம்னு நான் நினைச்சிட்டிருந்தேன். அதை விட பெரிய விஷயமும் இருக்கு சீதா.''

''என்னன்னு தான் சொல்லேன்.''

''என்னத்த சொல்ல. கல்யாணம் ஆகி பல வருஷம் ஆயிடிச்சு. இன்னும் வயித்துல ஒரு பூச்சி புழு இல்லைன்னு என் மாமியார் கரிச்சு கொட்றாங்க.''

''பூச்சி புழு இருந்தா அமீபியாசிஸ்னு சொல்வாங்க. தெரிஞ்சுக்கோ. இதுக்கு நீ சந்தோஷம் தான் படணும்.''

''விளையாடதே சீதா... உனக்கு கல்யாணம் ஆனா தான் நான் சொல்றதோட அர்த்தம் தெரியும்.''

''ஆமா.. நான் பாட்டில்ல பால் குடிக்கற பாப்பா பாரு. அக்கா இப்ப இதெல்லாம் ரொம்ப சின்ன விஷயம். டாக்டரைப் போய் பாரு. எல்லாம் சரியாயிடும்.''

''நானும் பாக்கலாம்னு தான் சொல்றேன். ஆனா அவர் தான் வரமாட்டேங்கறார். இந்த விஷயத்துக்காக டாக்டரைப் பாக்கறது கேவலமாம்.''

''இதெல்லாம் வறட்டு ஆம்பளத்தனம். அத்தானைப் பார்த்து நானே சொல்றேன் கவலப்படாதே.''

அவள் சாதாரணமாகத்தான் சொன்னாள்.

ஆனால் தேவானை அரண்டு போய்விட்டாள்.

''ஏன்கா பயப்படறே?''

''ஐய்யோடிம்மா. நீ காரியத்தையே கெடுக்கப் பாக்கறே.''

''இதுதான்கா வழி... வேணும்னா அப்பாவை விட்டு பேசச் சொல்லட்டுமா.''

''வேண்டாம் வேண்டாம், நம்ம வீட்டு விஷயத்தை நீ வெளியில வெச்சு பேசினியான்னு என்னை புரட்டி எடுத்துடுவாரு...''

''நாங்கள்ளாம் அப்ப வெளி மனுஷங்களா..''

''நானே இன்னும் அங்க அப்படித்தானே இருக்கேன்.''

தேவானை சொன்ன போது கண்ணில் கண்ணீர் கொப்பளித்தது.

ஆதிகேசவருக்கே நெஞ்சைக் கரித்தது.



''நான் சொத்து பத்து பார்த்து ஏமாந்துட்டேன். அந்த ...ளுக்கு ஊர் பூரா வைப்பாட்டி. இதுல பல பொண்ணுங்கள கல்யாணம் பண்ணிக்கறதா சொல்லி ஏமாத்தினதுல அவங்க தற்கொலை வேற செய்துகிட்டாங்களாம். அந்த கதை எதுவுமே தெரியாம உன்னை தூக்கி அந்த ஆளுக்கு கொடுத்திட்டேன். அவங்க பாவம்லாம்தான் இப்ப என் மகளை போட்டு வாட்டி எடுத்துகிட்டிருக்கு.''

ஆதிகேசவர் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதார். பாக்கவே பரிதாபமாக இருந்தது. அதை எல்லாம் பார்த்த பிறகு தேவானை பிறந்த வீட்டுக்கு வந்து கண்களை கசக்குவதையே விட்டுவிட்டாள். எதுவாக இருந்தாலும் சரி தாமாக சமாளிப்பது என்கிற முடிவுக்கு வந்து விட்டாள். சீதம்மாவிற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

அப்பொழுது அவளது வாழ்க்கையில் குறுக்கிட்டவன் தான் சந்திரன்.

வானத்து சந்திரன் மட்டுமா அழகு... இவனும் தான்..

''சந்திரன் தங்கமான புள்ளைங்க. சீதாம்மா மேல உசுரையே வெச்சிருந்துச்சு. நானும் கூட அதை பல தடவை பார்த்துருக்கேன். சந்திரன் இத்தனைக்கும் பெரிசா படிச்ச ஆள் இல்ல. பணம் காசும் கிடையாது. நர்சரி கார்டன் வெச்சு நடத்திக்கிட்டிருந்துச்சு. சீதம்மா அந்த கார்டனுக்கு பூச்செடிங்க வாங்கப் போகும். அப்படியே நாய்க்குட்டிங்க, பூனைக்கட்டிங்களையும் வித்துக் கிட்டிருந்துச்சு. வாயில்லா ஜீவனுங்கன்னா சந்திரனுக்கு உசுர். தெருவுல ஏதாச்சும் நாய் பூனை அடிபட்டு கிடந்தா தூக்கிட்டு போய் வைத்தியம் பார்த்து தன் தோட்டத்துல வெச்சுக்கும். எங்க பண்ணைக்கு ஒரு வேட்டை நாய் வாங்கப் போனப்ப தான் நானே அதை பார்த்தேன்.''

சேடச்சி சீதம்மாளின் கதையை டாக்டரிடம் சொல்லிக் கொண்டிருந்த அந்த நொடி கத்தரிக்கிற மாதிரி சீதம்மாவின் இடுப்பு வலி எடுக்கும் சப்தம் அவள் வரை கேட்டது.

கஸ்தூரி அதற்கு மேல் உட்கார்ந்து கதை கேட்காமல் வாரிச் சுருட்டிக் கொண்டு புறப்பட்டாள். சேடச்சியும் பின் தொடர்ந்தாள்.

வார்டில் புழு போல நெளிந்து கொண்டிருந்தாள் சீதம்மா. நர்ஸ் பதறினாள்.

''டாக்டர்.. குழந்தை வயித்துல குறுக்க விழுந்துட்ட மாதிரி தெரியுது...''

''நான் தான் சிசேரியனுக்கு ரெடி பண்ணுங்கன்னு சொன்னேன்ல...''

''எல்லாம் ரெடி டாக்டர்.''

''அப்ப பேச்சு எதுக்கு.. கமான் க்விக்!''

சுறுசுறுப்பாக தொடங்கினாள் கஸ்தூரி.

''டாக்டர்... எங்கக்கா....'' சீதம்மாள் வலிக்கு இடையிலும் தேவானையை மறக்காமல் கேட்டாள்.

''வந்துகிட்டேயிருக்காங்க. இப்ப வந்துடுவாங்க.''

''நெஜமா..''

''நெஜமாம்மா...''

''அவர் வந்துருக்காரா?''

''வந்துருக்காரே... உன்ன பாக்கலியா?''

''இல்லையே...''

''நர்ஸ். போய் உடனே அவரை கூட்டிக்கிட்டு வாங்க. கமான்.''

நர்ஸ் வெளியே ஓடினாள்.

வெளியே காரிடாரில் குட்டி போட்ட பூனை போல நடந்து கொண்டிருந்தார் ராயர். ஒரு ஓரமாக உர்ராங்காட்டான் குரங்கைப் போல உட்கார்ந்திருந்தாள் பாண்டியம்மாள்.

நடுநடுவே ஆரம்பத்தில் அவளிடம் திட்டு வாங்கியிருந்த நர்சும், வார்டுபாயும் தென்பட்டு தென்பட்டு மேலும் மேலும் கோபம் மூட்டியபடி இருந்தனர்.



''குழந்தை மட்டும் பொறந்து முடியட்டும். இந்த ...னை கால் கையை வாங்கிப்பிட்டேன்.''

''ஆமா.. இவனுங்கல்லாம் ஒரு ஆளுன்னு நீயும் ...ணங்கிக்கிட்டே இரு. எல்லாம் தான் நான் ...த்துக்கறேன்னு சொல்லிட்டேன்ல...''

ராயர் ஆறுதல் சொல்லும் போது நர்ஸ் கச்சிதமாக எதிரில் வந்து நின்றாள்.

''சார் உங்கள சீதம்மா பாக்கணும்ங்கறாங்க...'' ராயர் உடனே கிளம்பக் காலெடுத்தார் பாண்டியம்மாள் முறைத்தாள்.

''சரி சரி நீயும் வா...''

''என்னாத்துக்கு... என்னையா கூப்பிட்டா உன்னத் தானே?'' பாண்டியம்மாள் பிகு செய்து கொள்ள தலையில் அடித்துக் கொண்டு அவர் மட்டும் உள்ளே செல்ல ஆரம்பித்தார்.

பிரசவ அறையில் ஆபரேஷன் டேபிளில் கிடத்தப் பட்டிருந்தாள் சீதம்மா.

ராயர் வரவும் ஓரப்பார்வை பார்த்தாள். ராயரும் பார்த்தார். பார்வையே அருகே அழைத்தது.

''கிட்டப் போங்க. கூப்புட்றாங்க.''

ராயர் நெருங்கிச் சென்று நின்றார். நல்ல ஆண்மகன் என்பவன் இந்த மாதிரி தருணங்களில் கண்ணிலேயே அன்பைக் காட்டுவான். வருடிக் கொடுப்பான். முத்தமும் தருவான்.

''தைரியமா இருக்கணும். நான் இருக்கேன்ல..'' என்பான். அவன் கரத்தை அவளும் ஒரு உடும்பைப் போல பிடித்துக் கொள்வாள்.

''ஒண்ணும் இல்லடா... ஒண்ணும் இல்ல. கொஞ்சம் பொறுத்துக்கோ. சிங்கக்குட்டி மாதிரி நமக்கு ஒரு குழந்தை பிறக்கப்போற நேரம் இது. இப்படியா பயப்படுவே

பைத்தியம்... பைத்தியம்...'' இப்படிப்பட்ட காட்சிகளைத் தான் டாக்டர் கஸ்தூரியும் பார்த்திருக்கிறாள்.

நேர்மாறான ஒரு காட்சி அங்கே தெரியத் தொடங்கியது.

''என்னங்க...''

''சொல்லு...''

''ரொம்ப வலிக்குதுங்க.''

''என்ன பண்ணச் சொல்றே. உன் வலிய நான் பட முடியுமா என்ன?''

''அக்கா வரலிங்களா?''

''அக்கா... அக்கா.. ஏண்டி நானும் எங்கம்மாவும் மனுஷங்களா தெரிலியா?''

''எனக்கு எதுனா ஆயிட்டா அக்கா தானுங்கோ நம்ம குழந்தையை பார்த்துக்கணும்.''

''அவள பத்தி எதுக்கு இப்ப போய் பேசறே... அவதான் ஒரு முழுப் பொம்பளையே கிடையாதுல்ல..''

ராயரின் பதில் சீதம்மாவை விட டாக்டர் கஸ்தூரிக்கு அதிக வலியை ஏற்படுத்தியது.

தொடர்ந்து அவர்கள் பேசுவதில் பெரிய சந்தோஷத்தை விட வேதனை தான் பெருகும் என்று அனுமானித்தவள் குறுக்கிடத் தொடங்கினாள்.

''போதும்மா... போதும்... சார் நீங்க வெளியே போய் காத்திருங்க...''

ராயரும் மறுபேச்சு பேசாமல் வெளியேறத் தொடங்கினார். வார்டு வாசலில் நின்று கொண்டு கஸ்தூரியை பார்த்தார்.

ஏதோ பேச விரும்புவது தெரிந்தது.

அவரை நெருங்கினாள். கதவும் மூடப்பட்டது. ஆனாலும் அங்கே நின்று கொண்டு பேசுவது சீதம்மாளின் காதில் விழத் தொடங்கியது.



''ஏம்மா.. எதுக்கு சீதா இப்படி பேசுது. குழந்தை பொறக்கறதுல ஏதாச்சும் சிக்கலா?''

''ஆமாம். வயித்துல கொடி சுத்திகிட்டு குழந்தை குறுக்குல விழுந்துருக்கு. நல்லா வேலை பார்த்துருந் தாங்கன்னா இப்படி ஆகியிருக்காது.''

''சரி இப்ப என்ன ஆகும். அதச் சொல்லுங்க..''

''வயித்தை அறுத்துதான் குழந்தையை எடுக்கணும் வேற வழியில்ல...''

''இதோ பாருங்க... அறுத்து எடுப்பீங்களோ இல்ல அறுக்காம எடுப்பீங்களோ எனக்கு குழந்தை நல்லபடியா பொறந்தாகணும்.''

ராயரின் தீர்சத்தில் ஒருவித சுயநலம் பளிச்சென்று தெரிந்தது.

டாக்டர் கஸ்தூரி அதை ஊர்ஜிதப் படுத்திக் கொள்ள விரும்புகிற மாதிரி அடுத்த கேள்வி கேட்டாள்.

''அப்ப சின்ன உயிர், பெரிய உயிர் இரண்டுல ஒண்ணத் தான் காப்பாத்த முடியும்னா?''

''இது என்ன கேள்வி... எனக்கு என் வாரிசுதான் கணக்கு. பெரிசு போனா போய்ட்டு போவுது. நூறு பொண்டாட்டிங்க கிடைப்பாங்க. ஆனா ஒரு வாரிசுங்கறது எவ்வளவு பெரிய விஷயம்கறது எனக்கு தானே தெரியும்.''

அதற்கு மேல் கஸ்தூரியால் அவரிடம் பேச முடியவில்லை. நறுக்கெனறு பேச்சை கத்தரித்துக் கொண்டு உள்ளே சென்றாள். கதவையும் சாற்றிக் கொண்டாள்.

உள்ளே சீதம்மாவின் பார்வை துளையிடுவது போல அவளைப் பார்த்துக் கொண்டிருந்தது.

வலி, முனங்கல், வேதனைக் கதறல் எதுவுமே இல்லை.

''என்ன சீதா... திரும்ப வலி குறைஞ்சிடிச்சா?''

''இல்ல டாக்டர். இந்த வலியை விட பெரிய வலியை வெளிய என் வீட்டுக்காரர் தன் பேச்சில எனக்கு கொடுக்க இது சின்னதாயிடிச்சு.''

''ஏய்... நான் சும்மா அவரை சீண்டினேன். அவரும் விளையாட்டுக்குத்தான் சொன்னார்.''

கஸ்தூரி சமாளித்தபடி இஞ்ஜெக்ஷன் சிரிஞ்ஜை தேடத் தொடங்கினாள்.

நடுவில் கதவு தட்டப்படும் சப்தம்.

எட்டிப் பார்க்க நர்ஸ் எதிரே தேவானை.

''நான் தான் தேவானை. என் தங்கச்சி சீதம்மா...''

''உள்ள வாங்க.. உங்களுக்காகத்தான் காத்துக் கிட்டிருக்கோம்.''

''அக்கா...''

''சீதம்மா கண்ணு...''

''அக்கா...''

இருவரும் கட்டிக் கொண்டனர்.

''என் ராசாத்தி... ரொம்ப வலிக்குதா.''

''இல்லக்கா.. அதான் நீ வந்துட்டியே...''

''கவலைப்படாதே நான் இருக்கேன். நான் இருக்கேன்.'' தேவானை ஒருமுறைக்கு இரு முறை சொன்னாள்.

''தேவானை நீங்க பிரசவம் நடக்கும் போதும் கூடவே இருக்கலாம். உங்க பிரசன்ஸ் ரொம்ப அவசியம். கொஞ்சம் போய் கை, காலை எல்லாம் நல்லா டெட்டால் போட்டு கழுவி கிட்டு வந்துட்றீங்களா?''

கஸ்தூரி சொன்னதைக் கேட்கவும் சீதம்மா முகம் பிரகாசமாகியது.

''டாக்டரம்மா... அக்காவும் கூடவே இருக்கப் போறாளா...''



''ஆமா.. உங்களுக்காக நான் ஸ்பெஷலா.. அவங்களை அட்மிட் பண்றேன். ஓ.கே.தானே?''

''ரொம்ப சந்தோஷம் டாக்டர்.''

''ஓ.கே. இப்ப எனக்கு கோ ஆபரேட் பண்ணீங்கன்னா ஆபரேஷன் கூட பெரிசா பண்ணாமலே நான் குழந்தையை வெளியே எடுத்துடுவேன்.''

''என்ன பண்ணனும் டாக்டர்...''

''நல்லா மூச்சை இழுத்து முக்கி பிரஷர் கொடுங்க பார்ப்போம்.''

''கொடுக்கறேன் டாக்டர். அக்கா வந்துட்டால்ல அதுபோதும். ஹீப்!''

சீதம்மா கஸ்தூரிக்கு ஒத்துழைக்கத் தொடங்க புதிய உயிர் ஒன்று கர்ப்பவாசலை கடந்து தன் சிரசை காட்டிக் கொண்டு எட்டிப் பார்க்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

சாய்வாக படுக்க வைக்கப்பட்டு, கால்களை மடக்கி பெல்ட் போட்டு கட்டப்பட்டு கைகளை இரண்டு பேர் பற்றிக் கொள்ள, தலையருகே தேவானையும் வந்து நின்று கூந்தலை வருடித்தர....

''உம் நல்லா மூச்சை இழுத்து தம் காட்டி பிரஷர் கொடுங்க பார்ப்போம்.''

டாக்டர் கஸ்தூரியின் குரல் அவளை மேலும் மேலும் தூண்ட அடிவயிற்றில் ஒரு விரலில் ஏற்பட்டு பிஞ்சுக் குழந்தை ஒன்றின் கருத்த தலைமுடித் தலையின் விட்ட பாகம் பெண்மையின் வாசலில் வெளித்தெரிய கஸ்தூரியின் கரங்கள் அந்த தலையை சில ஆயுதங்களின் துணையோடு பற்றி இழுக்கத் தொடங்கியது.

உயிரோவியமே வா!

உனக்காக ஒரு கூட்டமே காத்துக் கொண்டிருக்கிறது. உன்னால் தான் பலருக்கும் பேரும் புகழும் விளங்கப் போகிறது.

வா... வா... வந்து விடு!

உன் தாய்க்கு ஒரு அர்த்தத்தைத் தருவதற்காக நல்ல விதமாக வா.

உம்.. இன்னும் கொஞ்சம். கொஞ்சம் தான்.. வந்தாச்சு... இதோ... இதோ...

'ப்ளாவ்க்க்...'

தலை வெளியே இழுக்கப்பட்ட மறுநொடி பனிக்குட நீரின் வழவழப்போடு அந்த சிசு முழுவதுமாக வெளிப்பட்டு வெளிக் காற்றுபட வீறிட்டும் அலறத் தொடங்கியது.

'க்குவா. க்குவா. க்குவா...!'

தேவானை ஓடி முன்னால் வந்தாள்.

டாக்டர் கஸ்தூரியின் கரத்தில் வீறிட்ட சிசுவை கண்கள் கலங்க பரவசத்தோடு பார்த்தாள்.

ஆண் சிசு..! தொப்புள் கொடியை ஒரு நர்ஸ் பிளேடால் பக்குவமாக அறுத்துக் கட்டிவிட அழுகுரல் வார்டுக்கு வெளியிலும் கேட்கத் தொடங்கியது.

ராயர் காதிலும் விழுந்தது.

துள்ளிக் கொண்டு எழுந்தாள் பாண்டியம்மாள்.

''வல்லபா... என் ராசா! நீ அப்பனாயிட்டேடா.. உன்னை இனி ஒரு நாயும் ஆம்பளை இல்லைன்னு சொல்லிட முடியாது.''

என் வம்சம் எங்க விளங்காமல் போயிடுமோன்னு நினைச்சு கலங்கிகிட்டிருந்தேன். நல்ல வேளை...''

-அவளது பரவசத்தில் தப்பித்தவறி கூட அது தெய்வ சித்தம் என்கிற நினைப்பே இல்லை.

ராயர் அடுத்த நொடி ஜிப்பா பாக்கெட்டில் கையைவிட கொத்தாக அகப்பட்டது இந்திய கரன்சி. வெளியே எடுத்தவர் உற்சாகமாக வீசி எறிந்தார். அங்கே தற்காலிகமாக ஒரு பண மழை பொழிய ஆரம்பித்தது.



...அவ்வளவும் மாமனார் ஆதிகேசவர் அள்ளித்தந்த ...மாமனார் பணம் மருமகன் இறைக்கத்தானே...?

## 7

**'ஆணில்லாமல் பெண்ணால் வாழ்ந்து விட முடியும். பெண்ணில்லாமல் ஆணால் வாழ முடியுமா?'**

டாடா சுமோவில் இருந்து இறங்கி உள்ளே நுழையும் ...தே பாண்டியம்மாளிடம் பிலாக்கணம் ஆரம்பமாகி ...ட்டது.

பின்னாலே சோகப் பதுமையாக தேவானை.

ஹாலில் அப்பொழுது தான் கோழி பிரியாணியும், கொஞ்சம் விஸ்கியும் குடித்துவிட்டு வந்து அமர்ந்திருந்தார் ராயர்.

பாண்டியம்மாள் கத்தியபடி வரவும் நிமிர்ந்து பார்த்தார்.

''என்னடா பாக்கறே... அவ்வளவுதான். இனி இந்த ராயன் வம்சம் அவ்வளவுதான்னு சொல்லிப்புட்டாங்க.''

''கொஞ்சம் புரியாறாப்பில சொல்லு ஆத்தா...''

''என்னத்த புரியறாப்பில சொல்றது? உன் பொஞ்சாதின்னு ஒரு மலடியை கட்டி கிட்டு வந்திருக்கியே அவளுக்கு இந்த ஜென்மத்துல பிள்ளை பெத்துக்கற பாக்கியம் கிடையாதாம்.''

''யார் சொன்னது?''

''யார் சொல்லுவாங்க. எல்லாம் டாக்டருங்கதான். நீதானே சொன்னே டெஸ்ட் பண்ணிகிட்டா எல்லாம் தெரிஞ்சிடும்னு. தெரிஞ்சு போச்சு...''

''விபரமா சொல்லு..''

''என்னத்தடா சொல்லச் சொல்றே? இவளுக்கு கர்ப்பப்பைன்னே ஒண்ணு இல்லையாம். பேருக்கு என்

வெத்தலைப்பை கணக்கா ஒண்ணு இருக்குதாம். அது இருக்கறதும் ஒண்ணாம். இல்லாம இருக்கறதும் ஒண்ணாம்.''

அடுத்த விநாடி ராயர் பார்வை தேவானை பக்கம் திரும்பியது. ஊருக்குள் தன்னை ஆண்மையில்லாதவன் என்று சிலர் பேசிய பேச்சும், காதோரமாக, ஊர்வலம் போகத் தொடங்கியது உள்ளிறங்கியிருக்கும் விஸ்கி போதையோடு கோபம் ஆற்றாமை என்று எல்லாவற்றையும் போட்டு கலக்கத் தொடங்கியது.

தேவானை நடுங்கிப் போனாள். கண் இமைகளில் கண்ணீர் வந்து உதிரத் தயாராக இருந்தது.

''எலேய்... வல்லபா... இனி இவளை நம்பறதுல பிரயோஜனமே இல்லடா. இது பூக்காத புளிய மரம். காய்க்காத கரி மரம். ஒதுக்கி ஓரமாக இவளைத் தள்ளிட்டு உனக்கு இன்னொருத்திய பார்த்து கல்யாணம் கட்டிட்டுத்தான் மறுவேலை.''

பாண்டியம்மாள் சொன்ன மறுநொடியே ராயரிடம் ஆமோதிப்பு பதிலாக பிறந்தது.

''ஆமாம் ஆத்தா.. இந்த முண்டையாலதான் இவ்வளவு நாளா எனக்கு ஊருக்குள்ளே கெட்ட பேர். தோச்சு கட்ட ஒரு நல்ல கோவணம் இல்லாத பய எல்லாம் என்னை பத்தி முதுகுபின்னாலே பேசற அளவு ஆகிப்போச்சு.

நம்ம செஞ்சிருட்டி ராமநாதன் பொண்ணு ஒண்ணுக்கு மாப்ள பாக்கதா சொன்னியே. அவளையே எனக்கு முடிக்கப் பாரேன்.''

''அதைத்தான் நானும் நினைச்சேன். நீயும் சொல்லிட்டே. நானே அதுக்காண்டி நேர்ல பொறப்பட்டேன். ஆமா, இவளை என்ன பண்ணலாம்...''

''என்னத்த பண்ண... அறுத்துவிடுவோம். இவ இங்க இருக்கும் போது எந்த பொண்ணு முழு மனசா உனக்கு மருமகளா வர சம்மதிப்பா...''



''போட வெறும்பயலே.. அறுத்துவிட்டா சந்தோஷமா ஓடிடுவாடா. இவபாட்டும் ஒரு ஓரமாக கிடக்கட்டும். அதான் இங்க ஆயிரம்வேலை இருக்குதே?''

பாண்டியம்மாள், கருணை வீசை என்ன விலை என்கிற மாதிரி பேசுவதை சேடச்சியும் கேட்டுக் கொண்டிருந்தாள். அப்படியே கழுத்தை நெறித்து கொன்றுவிட வேண்டும் போல இருந்தது.

பண்ணையில் தம்பி முருகனிடம் சொல்லிப் புலம்பினாள்.

''முருகா.. இனிமேட்டு இந்த பண்ணலை நீயும் நானும் மட்டுமில்லடா. நம்ம சின்னதாயியும் நம்மளோட சேருது.''

''என்னா சேடச்சி சொல்றே?''

''அது செஞ்ச பாவம். அதுக்கு ஒரு புள்ளகுட்டிய அந்த சாமி கொடுக்காம உட்டுட்டான். அதனாலேயே அதையும் அடிமாடாக்கிட்டா அந்த ராட்சஸக் கெழவி.''

''இது அவங்க அப்பாவுக்கு தெரியுமா?''

''இன்னும் தெரியாது. தெரிஞ்சா உசுரையே உட்டுடுவாரு..''

''கெழவி ஏன் சொல்லாம இருக்குறா?''

''இவ போய் எதுக்கு சொல்றா. அவரு வந்தா சொல்வா... அப்படியே அந்த ஆளையும் ஒரு பிடி பிடிப்பா.''

முருகன் தாடையை தேய்த்துக் கொண்டான். மறுநாளே மாடுங்களை பத்திக் கொண்டு மேய்க்கச் செல்லும் சமயத்தில் பனங்காட்டூருக்கு அடுத்த ஊரில் இருக்கும் ஆதிகேசவரைப் போய் பார்த்து விஷயத்தைச் சொன்னான்.

ஆதிகேசவர் ஒடுங்கி ஒரு ஓரமாக உட்கார்ந்து விட்டார். சீதம்மாளும் முதலில் சேர்ந்து உட்கார்ந்து அழுதாள். பின் துணிந்து புறப்பட்டாள்.

# 8

**பெண்ணால் முடியாதது எதுவுமில்லை.**
**அவள் சக்திக்கு வானமே எல்லை.**

அக்காவை பார்க்க அவள் ராயர் வீட்டுக்கு வந்தபோது பாண்டியம்மாள் புலம்பிக் கொண்டிருந்தாள்.

''இந்த செஞ்சருட்டி ராமநாதனுக்கு என்ன திமிரு. பொண்ணு கொடுக்க இஷ்டம். இஷ்டமில்லைன்னு இரண்டு ஒரு வார்த்தை சொல்லலாம, விளக்கெண்ண மாதிரி பேசறான். உனக்கு வாலிப பிராயம் கடந்துடிச்சாம். அதோட இரண்டாம்தாரமா தன் பொண்ணை தர இஷ்டமில்லியாம். மூத்தவளை அறுத்து கட்டுங்க. அப்பால வாங்க.. நாளைக்கு சொத்து பத்த பிரிக்கும்போது அவளுக்குமுல்ல போகுங்க நான்.'' புலம்பிக் கொண்டிருந்தாள் பாண்டியம்மாள்.

''அப்படியா சொன்னான் அந்த நாயி.. அவனை...''

''ஆமா.. என்ன பண்ண முடியும் உன்னால? அவன் மேல கை வெச்சா விவகாரம் தாண்டா பெரிசாகும். வேற எங்ககையும் கூட பொண்ணு பாக்க முடியாது.''

''அப்படி ஒரு சிக்கல் இருக்குதோ?''

''பின்ன...?''

''அப்ப இவளை முதல்ல அறுத்துக்கட்ட வேண்டியது தான் ஆத்தா. நான் நாளைக்கே பஞ்சாயத்துக்கு ஏற்பாடு பண்றேன்.''

- ராயர் துண்டை உதறியபடி சொல்லித் திரும்ப எதிரில் கலங்கிய முகத்தோடு நின்று கொண்டிருந்தாள் சீதம்மா.

அவளை எதிர்பார்த்திராத அதிர்ச்சியில் ராயரிடம் தடுமாற்றம். பின்னால் சுதாரிப்பு.

''நீ எங்க புள்ள வந்தே?''

''அக்காவை பார்க்கத்தான்...''

''பேசுனது காதுல விழுந்துச்சோ...?''



''உம்..''

''நல்லது.. உன் குடும்பத்துக்கு தனியா ஒரு தடவை விலாவரியா சொல்லவாணாம் பாரு...''

''அப்ப அக்காவை அறுத்து உடப் போறது நிச்சயமா மாமா.''

''இல்லாட்டி நான் ஆம்பளையா இருக்க முடியாதே...?''

''அடுத்து வர்றவளும் அக்கா மாதிரியே இருந்துட்டா என்ன மாமா பண்ணுவீங்க...''

''அவளையும் அறுத்து விட வேண்டியதுதான்.''

''அவகிட்ட என்னடா பேச்சு. இவ பெரிய்ய பெரிய மனிஷி பாரு. இவ கேக்கறா. நீயும் பதில் சொல்லிக்கிட்டு இருக்கே.''

- பாண்டியம்மாள் குரல் குறுக்கில் புகுந்து முகத்தில் அறைந்தது. தேவானை ஓடி வந்தாள்.

''சீதா நீ எதுவும் பேசாதே. எல்லாம் என் தலை எழுத்து. நடக்கிறபடி நடக்கட்டும்.''

-என்றபடியே அவளை இழுத்துச் சென்றாள்.

தனியாக ஒரு அறையில் ஒடுங்கினார்கள்.

''அக்கா.. நிஜமா உனக்கு குழந்தை பொறக்காதா?''

''ஆமாம்.. டாக்டருங்க அப்படித்தான் சொன்னாங்க.''

''போனா போகுது. மேற்கொண்டு என்ன பண்ணப் போறே?''

''தெரியல சீதா... நிச்சயம் நம்ம அப்பாக்கு பாரமாக நம்ம ஊட்டுக்கு திரும்பி வர மாட்டேன்.''

''அங்கையும் வரமாட்டே. இங்க இவங்களும் வெச்சுக்க போறதில்ல. என்ன பண்ணுவே?''

''பிச்சை எடுப்பேன்னு நினைச்சியா சீதா.. இனிமே எதுக்குடி இந்த உசுரு. பேசாம அரளி விதையை அரைச்சு விழுங்கிடப்போறேன்.''

''சபாஷ். இந்த தேசத்துல உன்ன மாதிரி பெண்கள்ளாம் சாப்பிடத் தானே அரளிக்காயே காய்க்குது.''

''இதோ பார். என்னைப் பத்தி கவலைப்படாம நீ கிளம்பு. நீயாச்சும் மனசுக்கு பிடிச்ச புருஷன் அமைஞ்சு சந்தோஷமா இரு. எனக்கு இப்படித்தான்னு அந்த ஆண்டவன் எழுதிட்டான்.

''அட ஏன்கா நீ வேற. ஆண்டவனுக்கு வேற வேலை இல்ல பாரு...''

''சீதா. தலைவலியும், திருகுவலியும் அவங்கவங் களுக்கு வந்தாதான் புள்ள தெரியும்.''

''சரிக்கா. இந்த பிரச்சினையை எப்படி சமாளிக் கறதுன்னு எனக்கு தெரியும். நீ கவலப்படாம தைரியமா இரு.''

''என்ன கண்ணு சொல்றே நீ.''

''பொறுத்திருந்து பார்...''

தேவானையை சமாதானப்படுத்தி விட்டு வெளியே வந்தவள் நேராக ராயர் எதிரில் போய் நின்றாள்.

''மாமா...''

''என்ன?''

''உங்க கூட கொஞ்சம் பேசணும்.''

''நீயும், நானும் பேச என்ன இருக்கு. உங்க அப்பனை வரச்சொல்லு. நான் அங்க பேசிக்கறேன்.''

''என் கூடையும் பேசலாம் நீங்க.''

''என்ன புள்ளே பேச்சும் தோரணையும் ஒரு மாதிரி இருக்குது.''

''நீங்க செய்யறது உங்களுக்கே நல்லா இருக்குதா?''

''இதோ பார். நீட்டி முழக்காம விஷயத்துக்கு வா.''

''நீங்க அக்காவை மலடிங்கற காரணத்துக்கர்க அறுத்துக்கட்ட நினைக்கறது ஆனாலும் அநியாயம்.''



''அது சரி. அதுக்காக காலம் பூரா தனிக்கட்டையா நான் இருந்து சாகணும்கறியா?''

''எதுக்கு அப்படி நினைக்கிறீங்க. அக்காவை குழந்தையா நீங்க நினைங்க. உங்களை குழந்தையா அக்கா நினைச்சுக்கட்டும்.''

''என்ன புள்ளே. சினிமா ரொம்ப பாப்பியோ. அதுலதான் இப்படியெல்லாம் வசனம் பேசுவாங்க.''

''வாழ்க்கை தானே மாமா சினிமாவாகுது.''

''சரி உனக்கு இப்ப என்ன வேணும் - சொல்லு.''

''அக்காவை நீங்க கடைசி வரை கூடவே வெச்சுக்கணும்.''

''அப்படின்னா அவ எனக்கு ஒருவாரிசைத் தரணும்.''

''அதுதான் முடியாதுன்னு ஆயிடிச்சே. வேணும்னா இன்னொரு கல்யாணம் பண்ணிக்குங்க. ஆனா அக்காவை மட்டும் விலக்கிடாதீங்க. தற்கொலை செய்துக்குவேன்னு சொல்றா.''

''நான் என்ன பண்ணட்டும். அவ இருந்தால் செஞ்சுருட்டியார் பொண்ணு இங்க வரமாட்டேங்கறாளே. அவளோட சேர்ந்து பெரும் சொத்தும்ல இருக்கு.''

''அப்ப அதுதான் உங்க முடிவா?''

''ஆமா. நீ கிளம்பு. நாளைக்கு பஞ்சாயத்துக்கு உங்கப்பனை வரச் சொல்லிரு.''

''வேற வழியே இல்லையா?''

''இருக்கு..'' - பதில் பாண்டியம்மாளிடம் இருந்து வந்தது. அவங்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள் அவள்.

''இவ்வளவு பேசற நீயே என் மகனை கட்டிக்கோ. அக்கா மேல அவ்வளவு பாசம் இருந்தா இதுக்கு ஒத்துக்கோ.''

பாண்டியம்மாள் போட்ட போடில் சீதாம்மாவுக்கு நெற்றிப் பொட்டில் வலித்தது.

நெடுநேரத்துக்கு பேச்சே வரவில்லை.

''என்ன புள்ள. என்ன சத்தத்தையே காணோம். உனக்கு உன் வாழ்க்கை தானே பெரிசா தெரியுது. அப்படித்தான் என் மகனுக்கும்.''

எதுவும் பேசவில்லை. பேச முடியவில்லை.

## 9

**ஆழ்கடலின் ஆழத்தைக்கூட கண்டவருண்டு.
ஆனால் ஒரு பெண்ணின் மன ஆழத்தை கண்டவரில்லை.**

மௌனமாக வெளியே வந்தாள் சீதம்மா.

நேராக சந்திரனின் நர்சரி கார்டனுக்குத் தான் போய் நின்றாள்.

''வா சீதா.'' - இதமாக வரவேற்றான் அவன். அவளிடம் இறுக்கமான மௌனம்.

''ஏன் ஒரு மாதிரி இருக்கே?''

''சந்திரன். பெண்களோட வாழ்க்கை மட்டும் ஏன் எப்பவும் ஒரு சூதாட்டம் போலையே இருக்கு.''

''என்ன சொல்றே சீதம்மா.''

அக்காவின் நிலையை விளக்கி முடித்தாள். சந்திரனிடமும் கலக்கம் தொற்றிக்கொண்டது. நெடுநேரம் அவனால் எதுவும் பேச முடியவில்லை. பிறகு சுதாரித்து பேச்செடுத்தான்.

''சரி.. என்ன பண்ணப்போறே சீதாம்மா.''

''என்ன பண்றது.. அக்காவுக்கு நாமதான் ஒரு வாழ்க்கை அமைச்சுக் கொடுக்கணும்.''

''எப்படி?''

''நான் ஒண்ணும் கேட்டா தருவீங்களா?''

''என்ன சீதாம்மா?''



''என் அக்காவுக்கு நீங்க வாழ்க்கை தருவீங்களா?''

சீதாம்மாவின் கேள்வி அவனை ஒரு உலுக்கே உலுக்கி விட்டது.

''சீதாம்மா என்ன பேசறே நீ?''

''அக்கா மாதிரி பெண்களை ஆதரிக்கறவங்க தான் சந்திரன் ஆம்பள.. அப்படி ஒருத்தர் இந்த உலகத்திலேயே கிடையாது. புள்ள பெத்துக்கறவங்க தான் ஆம்பளன்னு திமிறா பேசறார் எங்க மாமா. அவங்களுக்கு ஒரு பாடம் கத்துக் கொடுக்க வேண்டாமா?''

''சீதாம்மா எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல.''

''சந்திரன் உங்கள நான் நல்லா புரிஞ்சதால தான் இந்த உதவிய கேட்டேன். இத தர்ம சங்கடமா நினைச்சா விட்டுடுங்க. நம்ம காதலை விட இத நான் பெரிசா நினைக்கறேன். அக்காவுக்கு குழந்தை பிறக்காதுன்னு அவங்க சொல்றதுலையும் ஏதோ சந்தேகம் இருக்கு.''

''நீங்க கல்யாணம் பண்ணிக்கணும். அக்காவுக்கும் குழந்தை பிறக்கணும். அதே சமயம் அந்த வல்லபராயன்கிற என் மாமா சாயமும் வெளுக்கணும். என்ன சொல்றீங்க?''

சந்திரன் அவளையே ஊன்றிப் பார்த்தான்.

''என்ன பார்க்கறீங்க?''

''இப்படி நடக்கறதால அவர் சாயம் எப்படி வெளுக்கும்னு சொல்றே. அவர் இன்னொரு பெண்ணை கல்யாணம் பண்ணிகிட்டு அவர் ராஜாங்கத்தை அவர் நடத்தப் போறாரு. இதுல சாயம் வெளுக்க என்ன இருக்கு?''

''இருக்கு சந்திரன்... நீங்க மட்டும் எனக்கு உதவியா இருந்தா இந்த மாதிரி திமிரு பிடிச்ச ஆண்களோட கொட்டத்தை என்னால சுலபமா அடக்க முடியும்.''

''அதான் எப்படிங்கறேன்?''

''இப்ப அக்கா மலடிங்கறது தானே அவங்க குற்றச்சாட்டு''

''ஆமா..''

''அக்காவும் மாமாவை பார்த்து சொல்லட்டுமே. என்கிட்ட குறை இல்லை உங்ககிட்டதான்னு.''

''எப்படி... எப்படி''

''அவங்க அக்கா மேல போட விரும்பற பழியை அக்கா அவங்க மேலயே போட்டா.''

''நம்பணுமே ஊர். உங்க அக்காவுக்கு டாக்டர் சர்டிபிகேட் இருக்கே.''

''அது பொய்னு சொல்வோம். மாமா தான் ஆண்மையில்லாதவர்னு சொல்வோம். நாம் சொல்றது பொய்னா அவர் டாக்டர் டெஸ்ட்டுக்கு உள்ளாகட்டும். ஏன் அதுக்கு மட்டும் அவர் முன்வரவே மாட்டேங்கறாரு.''

''வேணும்னா ஒரு சலனத்தை உருவாக்கலாம். இதனால பெரிசா மிஸ்டர் வல்லபராயர் ஸ்தம்பிப்பார்னு நான் நினைக்கலே.''

'' அப்ப உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?''

''அப்படி இல்ல. ஒரு விஷயத்துல இறங்குறதுக்கு முந்தி எல்லா கோணங்களையும் பார்க்கணுமில்லியா?''

''நீங்க சரின்னு சொல்லுங்க. என் நம்பிக்கை வீண்போகப் போறதில்ல. ஒரு நல்ல ஆண்மகனா எனக்கு உதவி செய்யுங்க. வாழ்க்கைங்கறது செக்ஸ்க்காக மட்டுமில்ல. அதுக்கு வேற அர்த்தமும் உண்டுன்னு நாம் நிரூப்பிப்போம்.''

''நீ இவ்வளவு தூரம் சொல்லும் போது நான் மறுப்னோ. உன்னோட ஒரு நல்ல முயற்சிக்கு என் ஆதரவு எப்பவும் உண்டு.''

சந்திரன் திடமாகச் சொன்னான். கண்கள் பணித்து விட்டது சீதம்மாவிற்கு.

அப்படியே மண்டியிட்டாள்.

அவனை தெய்வமாகக் கருதி காலில் விழுந்தாள்.



''ஏய் பைத்தியம்.. பார்த்தியா என்னை பாவியாக்குறியே...''

''நான்தான் சந்திரன் பாவி... இந்த ஜென்மத்துல எனக்கு இல்லாம போயிட்டீங்களே.''

''இங்க பார்.. அண்ணா சொன்ன ஒரு கருத்தை நான் இங்க இப்ப உனக்கு சொல்ல விரும்பறேன். எதையும் நாம் இழக்கிறோமே என்று எண்ணி துன்பப்படக்கூடாது. பெறுபவர்கள் அடையப் போகும் மகிழ்ச்சியை எண்ணி நாமும் மகிழ வேண்டும்.''

''சந்திரன் உங்களுக்கு சமுத்திர மனசு.''

''என்ன விட உனக்குத்தான் சீதம்மா பெரிய மனசு. அக்கா வாழ்க்கைக்காக நீ உன் காதலையே பணயம் வெச்சு ஒரு வேள்வியல்லவா நடத்தறே?''

அதன் பின் அவளால் அவனிடம் நின்று பேச முடியவில்லை. அக்காவை தயார்படுத்தும் ஆவலாதி பிடித்துத் தள்ளியது.

சந்திரன் அடுத்து கேட்ட கேள்வி தான் அதற்கு காரணம்.

''ஆமா... இப்படி நீயா இங்க திட்டம் போட்றியே. இதுக்கு உங்க அக்கா சம்மதிப்பாங்களா?''

''சம்மதிக்க வைக்கணும் சந்திரன். சம்மதிக்கவும் வைப்பேன். அந்த வல்லபராயனையும். அவன் அம்மாவையும் மன்னிக்க வைப்பேன்.''

''எனக்கென்னவோ உங்கக்கா ஒத்துப்பாங்கன்னு தோணலை.''

''அப்ப அந்த நம்பிக்கைல தான் நீங்க சரின்ன சொன்னீங்களா?''

சந்திரன் அறைப்பட்ட மாதிரி ஆனான்.

''என்ன பாக்கறீங்க. சொல்லுங்க!''

''என்னத்த சொல்லட்டும் சீதம்மா. நீ இப்படிகேட்டா நான் எதை பதிலா சொல்ல முடியும்? என்னை நீ புரிஞ்சது இவ்வளவு தான்?''

''சாரி சந்திரன்! உங்களை நான் நல்லாதான் புரிஞ்சு வெச்சுருக்கேன். ஆனா நீங்க தான் என்னை புரிஞ்சுக்கல.''

''இல்ல சீதம்மா. உன் அக்கா சம்மதிப்பாளான்னு நான் கேட்டது. உன் மேல உள்ள அவநம்பிக்கையால இல்ல. உன் அக்காவை நான் நல்லபுரிஞ்சு வெச்சுகிட்டு இருக்கறதால...''

''எப்படி?''

''அவங்க உன்னைப் போல படிச்சவங்க இல்ல. முற்போக்கா சிந்திக்க முடிஞ்சவங்களும் இல்ல. தன் கணவர் தன்னையே குறை சொல்லும் போதும் எதிர்க்க முடியாத நிலைல இருக்கற ஒரு சராசரி பெண். எதிர் நீச்சல் போட தைரியமில்லாம தற்கொலை பண்ணிக்க நினைக்கறவங்க. இவங்க எப்படி உன் பேச்சைக் கேட்டு கணவரைக் குற்றம் சொல்றதோட என்னையும் கல்யாணம் பண்ணிக்க சம்மதிப்பாங்க.''

''அக்காவை பத்தி எனக்குதான் நல்லா தெரியும் சந்திரன். எனக்காக என் அக்கா எதையும் செய்வா.''

''அப்படியா?''

''பாருங்களேன்.''

''உன் நம்பிக்கைப்படி எல்லாம் நடந்தா எனக்கு ரொம்பவும் சந்தோஷம்.''

சந்திரன் திடமாகச் சொன்னான். திரும்பவும் அவனை நன்றியோடு பார்த்தாள் சீதம்மா!

## 10

### 'இனிப்புக்கு தேன்... அன்புக்கு மனைவி!'

ராயர் பங்களாவில் நுழையும்போது ஏக களேபரமாக இருந்தது. சேடச்சியின் தம்பி முருகனை தூணில் கட்டி வைத்து விளாசிக் கொண்டிருந்தார்கள்.

ராயருக்கு குளிப்பதற்காக வென்னீர் எடுத்து வைத்தவன் அதை விளாவி பதமாக வைக்கவில்லையாம்.



அதனால் முதுகுத் தோல் உரிந்து விட்டதாம். பதிலுக்கு அவன் முதுகுத் தோலை போட்டு உரித்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் துடித்துக் கொண்டிருந்தான்.

''அய்யா என்ன மன்னிச்சிடுங்கய்யா. நான் தெரியாம பண்ணிட்டேன்யா. வேணும்ணு பண்ணலிய்யா?''

''ஓஹோ... இதுல வேணும்ணு பண்றதெல்லாம் வேற இருக்கா?''

''ஐய்யா ஐய்யா. நான் சாதாரணமா சொன்னேன்யா...''

சப்தம் பங்களா முழுக்க எதிரொலித்தபடி இருந்தது. ராயர் மீசையை நீவியபடி அதை கேட்டுக் கொண்டிருந்தார். கண்பார்வை தினத்தந்தியை மேய்ந்து கொண்டிருந்தது. பக்கத்தில் பாடம் செய்து வைத்திருந்த ஒரு புலி பொம்மை. நானும் ஒரு புலி என்கிற மாதிரி உட்கார்ந்து கொண்டிருந்தார். நடுவில் பாண்டியம்மாள் வேறு வந்து ''வேலக்கார நாயி. என் மகன் உடம்பு உனக்கு உருளக்கிழங்காடா? தோலையா உரிக்கப் பார்த்தே நாயி.. நாயி...?'' என்று கத்திவிட்டுப் போனாள்.

சீதம்மா உள்ளே நுழைந்தபோது முருகன் மயங்கி மலைசாய்ந்து விட்டிருந்தான்.

பார்க்கவே பரிதாபமாக இருந்தது. சுற்றிலும் வேறு யாருமில்லை.

முருகனைப் பார்த்த சீதம்மாவிற்கு இரக்கம் பீறிட்டது. அருகே சென்று குனிந்து பார்த்தாள்.

அதை ஒரு வேலைக்காரன் பார்த்துவிட்டு எங்கிருந்தோ வந்தான்.

''வாங்க தாயி.''

''என்ன இது... எதுக்காக கட்டி போட்டிருக்காங்க?''

''தாயி மெள்ளப் பேசுங்க. இவன் கெட்ட நேரம் வென்னித் தண்ணியை ஒழுங்கா வைக்காம இப்படி மாட்டிகிட்டான்.''

இருவரும் பேசுவதைக் கேட்டு முருகன் மெல்ல தலை நிமிர்ந்தான்.

''ஆமா. அதுக்காகவா இவ்வளவு கொடுமையான தண்டனை?''

''இதெல்லாம் கம்மிங்க. காபியில் சக்கரை போட மறந்ததுக்கு நான் பட்டபாடு எனக்குத்தாங்க தெரியும்.''

அந்த வேலைக்காரனுக்கு கெட்ட நேரமோ என்னவோ அவன் அப்படிச் சொல்லும்போதே பாண்டியம்மாளும், ராயரும் அங்கு வரத் தொடங்கி விட்டனர்.

''என்னடா.. என்ன அங்க நின்னு போட்டு விட்டிக்கிட்டிருக்கே. அதுவும் அவகிட்ட?''

''ஒண்ணுமில்ல தாயி.. ஒண்ணுமில்ல.''

''என்ன ஒண்ணுமில்ல எல்லாத்தையும் கேட்டுகிட்டு தான் இருந்தோம்.''

பாண்டியம்மாள் சொல்லவும், அவனுக்கு உதறல் எடுக்கவும் சரியாக இருந்தது.

''வேலைக்கார நாயே உள்ளார இருந்து கிட்டே போட்டு விட்ரீகளோ? உன்னை...''

பாண்டியம்மாள் அவனைப் பிடித்துக் கொள்ள ராயர் சீதம்மாவை ஒரு தினுசாகப் பார்த்தார்.

பார்வையே என்ன விஷயம் என்று கேட்காமல் கேட்டது.

''அக்காவை பார்க்க வந்தேன்.''

''அது சரி.. முன்ன பேசின விஷயம் என்ன ஆச்சு?''

''அக்காவை பாத்துட்டு வந்து சொல்றேன்.''

''உன் அக்கா எங்கையும் ஓடிப்போயிடல. உள்றதான் உக்காந்து அழுது கிட்டிருக்கா. சட்டுபுட்டுன்னு ஒரு பதிலைச் சொல்லு. மிட்டாதார் செஞ்சுருட்டியார் பொண்ணுக்கு நான் ஒரு பதிலைச் சொல்லணுமில்ல.''



ராயர் கேட்ட தோரணையில் தூள் பறந்தது. சீதம்மாள் முகம் சுணங்கியது.

''சரி.. நாளைக்கு வந்து சொல்றேன். இப்ப அக்காவை பாத்துட்டு போயிட்றேன்.''

''வந்ததுல இருந்து அக்கா, அக்கான்னு சொல்லிகிட்டிருக்கியே அப்படி என்ன உங்க அக்காகிட்ட பேச விஷயமிருக்கு.''

சீதம்மா ராயரை நிமிர்ந்து குத்துவது போல பார்த்தாள்.

அதே சமயம் உள்ளே வேலைக்காரன் பாண்டியம்மாளிடம் மிதிபடும் சப்தம் கர்ணகடூரமாக கேட்கத் தொடங்கியது.

மனது நெருப்பாகிப் போனது.

காசும் பணமும் இருந்துவிட்டால் அதனால் வரும் திமிர் சக மனிதர்களை மனிதர்களாகவே மதிக்க விடாதோ? மனதுக்குள் நினைப்பு ஓடியது.

''என்னவோ நினைக்கற மாதிரி தெரியுதே. சொல்றதுக்கும் பயப்பட்ற மாதிரி தெரியுதே.''

''ஒண்ணுமில்ல. இந்த வேலக்காரங்கள எல்லாம் ஏன் இப்படி பாடா படுத்தறீங்க?''

''அவங்க ஒழுங்கா இல்லை. அவஸ்தைப் பட்றாங்க. பரவால்லியே என்னையே எதுத்து கேள்வி எல்லாம் கேக்கறியே. ஆமாம் எல்லாத்துக்கும் நீதான் வருவியா உன் அப்பன் வரமாட்டானா...?''

''அவருக்கு உடம்பு சரியில்லை...''

''தைரியமில்லைன்னு சொல்லு. ஒரு மலடியை கட்டிக் கொடுத்திட்டோங்கற உறுத்தல் இருக்கும்ல?''

சீதம்மாவை அந்த வார்த்தைகள் குத்தின. முறைத்தபடி தேவானையைத் தேடிப் போனாள்.

போகும் போது மனதுக்குள் வைராக்யம்.

'அக்கா இந்த நிமிஷம் நீ என் ஆயுதம்.

உன்னை வைத்துத்தான் இந்த கொழுப்பெடுத்தவர்களை நான் குத்திக் குதற வேண்டும்!'

தீர்மானத்தோடு போய் தேவானை எதிரில் நின்றாள்.

தேவானை அழுது முகம் வீங்கியிருந்தாள்.

''சீதாக்கண்ணு.''

''சீதாக்கண்ணுதான். என்னக்கா அழுதா உன் பிரச்சினை தீர்ந்துடுமாக்கும்?''

''என் தலை எழுத்து... நான் அழுவறேன். ஆமா நீ எங்க வந்தே?''

''எல்லா பிரச்சினைக்கும் ஒரு முடிவு கட்டத்தான்.''

''அப்படின்னா அவரை கட்டிக்க சம்மதிச்சுட்டியா?''

''இப்படி ஒரு மனுஷனை மிருகம் கூட கட்டிக்க சம்மதிக்காதேக்கா.''

''சந்தோஷம். நல்ல முடிவு தான் எடுத்துருக்கே. நீயாச்சும் நல்லா இரு சீதம்மா. யார் செஞ்ச பாவமோ நான் அனுபவிக்கறேன்.''

''எதுக்குக்கா அனுபவிக்கணும். தைரியமா நின்னு யோசிச்சா இவங்களை நாம அழுவ வைக்கலாம்.''

''என்ன சொல்றே?''

''உனக்கு ஒரு குறையும் இல்லக்கா. குறை இருக்கறதா உன் மாமியார் நாடகமாடறா...''

''என்ன சொல்றே சீதம்மா.. டாக்டரே எனக்கு குறை இருக்குன்னு சொல்லிட்டாங்களே.''

''பணம் கொடுத்தா கழுதையை குதிரைன்னு சொல்ல ஆயிரம் பேர் உண்டு இந்த ஊர்ல. அது தெரியுமா உனக்கு.''

''அப்ப... டாக்டர் பொய் சொன்னாங்கன்னு சொல்றியா.''

''ஆமா. அத்தானுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி அது மூலமாகவும் வரதட்சணை, சீருன்னு சுருட்ட உன் மாமியார் ஆசைப்பட்றான்னு நான் நினைக்கறேன்.''



''சரி அதுக்கு நாம என்ன பண்ண முடியும்?''

''என் கூடவா... உனக்கு ஒரு குறையும் இல்லேன்னு நான் நிரூபிக்கிறேன்.''

''மு... முடியுமா உன்னால?''

''ஏன் முடியாது. உனக்கு கர்ப்பப்பையே இல்லேன்னாலும் இன்னிக்கு நீ குழந்தை பெத்துக்க முடியும். அது தெரியுமா உனக்கு. விஞ்ஞானம் எவ்வளவோ வளர்ந்துருக்கு.''

''சரி நீ சொல்ற மாதிரி நான் மலடி இல்லைன்னு டாக்டருங்க சொல்லிட்டாங்கன்னே வெச்சுக்குவோம். என் மாமியார் பொய் சொல்லி என்னை கழிச்சு கட்டப் பார்த்தாங்கறது இதனால் தெரியவரும். அவ சும்மா இருப்பாளா?''

''அப்ப அவளுக்கு பயந்துகிட்டு நீ இப்படியே இருக்கப் போறியா?''

''சீதாக்கண்ணு. வேண்டாம் என் விஷயத்தை நீ ரொம்பவும் தான் அலசறே. அது உனக்கும் நல்லதில்லை. எனக்கும் நல்லதில்லை.

இந்த வீட்டுல ஒரு நல்ல மனுஷங்க கூட கிடையாது. அப்படி யாராச்சும் இருந்தா நமக்கு கொஞ்சமாச்சும் நியாயம் கிடைக்கும்.

இது அரக்கக்குடி.

நாம அவங்களை மீறி நடக்கறது தெரிஞ்சா நம்மை கொலை செய்யக்கூட அஞ்சமாட்டாங்க.''

''வாஸ்தவம் தான். இது அரக்கக்குடிதான். இங்க இனியும் நீ இருக்கணும்னு ஆசைப்பட்றியா?''

''என்ன கண்ணு சொல்றே. உங்க சங்காத்தமே வேணாண்ணு முழுக்கு போட்டுட்டு வந்துடுங்கிறியா? அதத்தானே அவங்களும் சொல்றாங்க.''

''ஆமாக்கா. அவங்க சொல்றபடி வெட்டிவிட்டு நீ வரத்தான் வேணும். அதே சமயம் நான் மலடி இல்ல பிள்ளபெத்து காட்றேன்னு சவால் விட்டு சொல்விட்டு வரணும் நீ.''

''ஐய்யோ.. அது எப்படி முடியும்?''

''முடியும்கா.. நூறு கெட்டவங்க இருக்கற இந்த ஊர்ல இரண்டு நல்லவங்களும் இருக்கத்தான் செய்யறாங்க.''

''புரியும்படி சொல்லு.''

''நீ இவுகள விட்டு வந்தா உன்னை கட்டிகிட்டு வாழ்க்கை தரவும் ஒருத்தர் தயாரா இருக்காருக்கா.''

''என்னென்னவோ சொல்றியே சீதா.''

''பதட்டப்படாதே. நிதானமா சொல்றதக் கேளு. நான் சொல்ற மாதிரி நடந்துக்கோ. நம்மை மிதிக்க நினைச்சவங்களே நாம திருப்பி மிதிக்கலாம்.''

சீதம்மா பீடிகை போட்டு அவளை அடக்கி விட்டு சந்திரனுடன் சேர்ந்து தான் போட்ட திட்டத்தைக் கூறினாள்.

ஒரு கணம் தேவானைக்கு மூச்சே நின்றுவிட்டது.

''என்னக்கா... ஏன் ஸதம்பிச்சுட்டே?''

''பின்ன என்ன சீதா.. நீ சொல்றது சாதாரண விஷயமா?''

''சாதாரண விஷயம் இல்ல தான். ஆனா இதுக்கு நீ துணியலென்னா வாழ்க்கை இல்லக்கா..''

''ஆமா அந்த சந்திரனை நீ தானே விரும்பினே?''

''அது நேத்து. உனக்கு ஒரு வாழ்க்கை கிடைக்கணும்னா சில விஷயங்கள இழந்து தான் தீரணும்.''

''முடியாது. எனக்காக நீ உன் காதலை இழக்க சம்மதிக்க மாட்டேன்.'' ஆவேசமாக கத்தினாள் தேவானை.

''காதல் ... பெரிய காதல்... வாழ்க்கைல வந்துட்டு போற ஒரு சாதாரன விஷயம் தான் அது. ஆனா கல்யாண



பந்தம்கறது அப்படி இல்லை. கட்டைல போய் படுக்கற வரை நம்மைத் தொடருகிற ஒண்ணு.''

என்னை கல்யாணம் பண்ணிக்க நூறு மாப்பிள்ளை - கிடைப்பாங்க. ஆனா உன்னை துணிச்சலா கல்யாணம் பண்ணிக்க சந்திரனை விட்டா ஆள் கிடையாதுக்கா.''

''வேண்டாம் சீதா. சொன்னா கேளு. இது அக்னிப் பரீட்சை.''

''ஆமா அக்னிப் பரீட்சை. நீ எழுதி தான் தீரணும்.''

''என்னை ஏன் இப்படி வதைக்கறே''

''வதைக்கல. காப்பாத்தறேன். புரிஞ்சுகிட்டு கை கொடு.''

''முடியவே முடியாது. உன் வாழ்க்கையை அழிச்சு அதுல எனக்கொரு வாழ்க்கையா?''

''அப்ப நாம் தற்கொலை செய்துக்கறதை தவிர வேற வழியே இல்லை. வா இரண்டு பேரும் சேர்ந்து ஒண்ணா சாவோம்.''

''நீ எதுக்கு சாகணும்?''

''அதையே நான் திருப்பி கேக்கறேன். நீ மட்டும் சாகலாமா?''

''அது என் தலையெழுத்து.''

''மண்ணாங்கட்டி. அதான் மாத்தி எழுதிக் காட்றேன்னு சொல்றேன்ல.''

''இல்ல நம்மால முடியாது. நமக்கு அந்த சக்தி கிடையாது.''

''சரி வா.. சேர்ந்து சாவோம்.''

''என்ன விட மாட்டியா?''

''மாட்டேன். விடவே மாட்டேன். சம்மதம்னு சொல்லு. கிளம்பறேன்.'' சீதா மடக்கிய மடக்கலில் தேவானை தெப்பமாக வியர்த்து விட்டிருந்தாள். நெடுநேரம்

எதுவும் பேசாமல் நின்றவள் இறுதியாக சரி என்ற தலையை அசைக்க.

''அப்படிப் போடு! இனிமே பாரு...'' உற்சாகமாக கத்தியே விட்டாள் சீதம்மா.

ஆனால் விஷயம் விபரீதமாகப் போவது அவளுக்கு தெரியவில்லை.

அறைக்கு வெளியே ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்த ராயர் கைகளை குத்திப் பிசைந்து கொண்டிருந்தார்.

மள மளவென்று கீழே வந்தவர் முருகனைத் தான் முதலில் கூப்பிட்டார்.

முருகனும் வலி வேதனையோடு எதிரே வந்தான்.

''எலேய்... உனக்கு அந்த சந்திரன் பயலத் தெரியும்ல?''

''ஆண்டே... தெரியும் ஆண்டே...''

''அவனைப் போய் கூட்டிகிட்டு வரே...''

அரைமணிநேரத்துல வர்றே. காரை எடுத்துக்கிட்டுப் போ.''

''சரிங்க ஆண்டே...''

அவன் துண்டை தோளில் போட்டுக் கொண்டு ஓடத் தொடங்கினான்!

(சரி கொஞ்சம் ஆஸ்பத்திரி வரைபோய் விட்டு மீதத்தை 12-ஆவது அத்தியாயத்தில் பார்க்கலாமா?)

## 11

**'பெண்ணைப் பிணியாய் நினைக்காதே**
**அவள் இந்த மண்ணுக்கே கண்!'**

குழந்தை பசியெடுத்து அழ ஆரம்பித்திருந்தது. சுற்றிலும் ராயர் பங்களாவே வந்திருந்தது. அவர்களில் முருகனும் இருந்தான்.

''உம். உம் எல்லோரும் கொஞ்சம் வெளிய போங்க, அவங்க குழந்தைக்கு கொஞ்சம் பால் கொடுக்கட்டும்.''



. நர்ஸ் எல்லோரையும் வெளியே போகச் சொல்லி சொன்னாள்.

பாண்டியம்மாள் மட்டும் அகலாமல், ''உம்... சீக்கிரமா பாலைக் குடுடி. புள்ள அழுவுதுல்ல'' என்ற சீதம்மாவை கொஞ்சம் அதட்டினாள்.

''நீங்களும் போங்க... கொஞ்சம் பெட்டை எல்லாம் எடுத்து க்ளீன் பண்ணனும்.''

-நர்ஸ் அவளிடமும் சொன்னாள். பாண்டியம்மாள் முறைத்துப் பார்த்தாள்.

''உங்களத்தாங்க. இப்படி பாத்தா ஆயிடிச்சா?''

''நானும் வந்ததுல இருந்து பாக்கறேன். நீ என்னை கிள்ளுக் கீரையாகவே நினைக்கறே...''

''நீங்க தப்பா புரிஞ்சுகிட்டிருக்கீங்க. யாரா இருந்தாலும் இங்க ரூல்ஸ் ஒண்ணுதான்.''

''என்ன பெரிய ரூல்ஸ். உலகத்துல இல்லாத ரூல்ஸ்.''

- திரும்பவும் சண்டை ஆரம்பமாகிவிட்டது. டாக்டர் கஸ்தூரி எட்டிப் பார்த்து சமாதானப்படுத்திய பிறகுதான் அடங்கியது.

சீதம்மாவும் நொறுங்கிப் போனாள்.

குழந்தை அழுது கொண்டே இருந்தது.

''நீ ஏண்ட எங்க வாயைப் பாக்கறே. அதுக்கு முதல்ல பாலக் கொடு. என் பேரனை பட்டினி போட்டே கொன்னுடுவே போல இருக்குதே.''

- சொன்னபடி அரைமனதாக வெளியே கஸ்தூரியின் பார்வை சீதம்மாவத் துளைத்தது. பால் தந்தபடியே கேட்டாள்.

''என்ன டாக்டர் பாக்கறீங்க?''

''படிச்ச பொண்ணா இருந்தும் எப்படிம்மா இதையெல்லாம் தாங்கிகிட்டு இவங்க கூட இருக்கே?''

''காரணம் இருக்குது டாக்டர்.''

''என்ன பெரிய காரணம். ரொம்ப அரகண்டா நடந்துக்கறாங்க. எல்லாரும் பயப்பட்றாங்க. நான் கொஞ்சம் ஒரு மாதிரி பார்த்தாலும் இந்த ஹாஸ்பிடலையே நான் விலைக்கு வாங்கிடுவேன். என்ன விலைன்னு உன் புருஷன் செக் புத்தகத்தை எடுத்துக் காட்டறாரு. இட்ஸ் டு மச்!

உன்னை நினைச்சா எனக்கு ரொம்ப பரிதாபமாக இருக்கு. அதைவிட உன் அக்காவை நினைச்சா ரொம்ப ரொம்ப பரிதாபமாக இருக்கு.''

- கஸ்தூரி சொல்லச் சொல்ல மனது கனலாக மாறி கொண்டே போனது.

''சரி சரி நீ இப்ப மனசைப் போட்டு குழப்பிக்காதே. ஐ ஆம் சாரி. நானும் ஏதேதோ பேசிட்டேன். வெரி சாரி.''

கஸ்தூரி இதமாக பேசியபடி அங்கிருந்து விலகினாள்.

வெளியே காரிடாரே அமளி துமளிப்பட்டுக் கொண்டிருந்தது.

பனங்காட்டுரே குழந்தையைப் பார்க்கத் திரண்டிருந்தது.

ஒருவர் கூட வெறுங்கையோடு வரவில்லை. வெல்வெட்டால் ஆன கரடி பொம்மையிலிருந்து குவா குவா வாத்தும் நடை வண்டியுமா ஒரு கூட்டமே வந்திருந்தது.

அப்படி வந்து பார்க்காவிட்டால் பாண்டியம்மாள் ஒரு பிடி பிடித்து விடுவாள் என்கிற பயம் பலரிடம்.

ராயரின் சகாக்கள் அவரைச் சுற்றி நின்று கொண்டு அவரை ஏற்றிவிட்டு கொண்டிருந்தார்கள்.

''தலைவா... கொஞ்சம் லேட்டுதான். ஆனா ஆம்பளப் பயலா பெத்து தள்ளிட்டீங்க.''

''ஆமா இது ஒண்ணுதானா. இல்லை தொடர்ந்து உண்டா?''

''அண்ணனுக்கு இருக்கிற ஆஸ்திக்கு நூறு பிள்ளை பெத்துக்கலாம். நீ வேற...''



''அது சரி.. என்னண்ணே வெறும் சாக்கலேட்டும், கமர்கட்டும் கொடுத்து எங்கள ஏமாத்தலாம்னு பாக்கறீங்களா?''

''எவண்டா இவன். ராத்திரி பண்ணைல பார்ட்டி இருக்குல்ல.. அண்ணே கொக்கரக் குளத்துகாரிய மடக்கி ஆட்டம் போடச் சொல்லிருவமா?''

''இன்னுமா சொல்லல - வெண்ணை....''

''அண்ணன் என்ன சொல்வாரோன்னுதான்.''

- ஆளாளுக்கு குஷியில் கூத்தாட ராயர் மீசையை நீவிக் கொண்டு ஞாபகமாக அந்த கேள்வியினைக் கேட்டார்.

''எலேய்.. என்னை ஆம்பள இல்லன்னு ஒருத்தன் சொன்னானே அவன் இப்ப என்னடா பண்ணிக் கிட்டிருக்கான்.''

''அண்ணே, அந்த டெய்லர்ப் பய மாணிக்கத்த கேக்குறீங்களா?''

''பார்ட்டி கேக்கத் தெரியும், ஆனா முக்கியமான இதுபத்தி மட்டும் எவனும் பேசமாட்டீங்க அப்படித் தானே?''

''என்னண்ணே பண்ணனும் சொல்லங்க.''

''என்ன பண்ணனுமா.. அவனை இழுத்துக்கிட்டு வாங்கடா சொல்லுறேன்.''

''அட என்னண்ணே நீங்க. உங்கள ஆம்பள இல்லன்னா அவன ஆம்பள இல்லாம பண்ணிட்டா முடிஞ்சுச்சு சோலி... இதுக்குப்போயி...''

''சொல்லாதே செய்யி.''

அந்தப் பேச்சு தேவானை காதுகளிலும் விழுந்தது. நெஞ்சைக் கட்டிக் கொண்டாள்.

'ராட்சஸா... ராட்சஸா காலமும் உனக்கே கை கொடுத்துக் கொண்டிருக்கிறதே!' என்கிற நினைப்போடு கசிந்தாள். அன்றைக்கு சீதம்மா போட்ட திட்டத்திற்கு

உடன்பட்டும் விதி வேறு விதமாக விளையாடியதை நினைத்துப் பார்க்கிறாள்.

கண்களில் கண்ணீர் கொப்பளிக்கத் தொடங்கியது.

## 12

**'பெண்ணைத் தேன் என்பார்!
அவள் தேளும் கூட...'**

பண்ணை வீட்டில் மால்பரோ சிகரெட் பிடித்தபடி இருந்தார் ராயர்.

எதிரில் வந்து நின்றான் சந்திரன்.

''வாங்கப்பு... எப்படி நடந்துகிட்டிருக்குது பொழப்பு?'' கரிசனமான கேள்வி ராயரிடம். சந்திரன் பதில் சொல்லாமல் சிரித்தான்.

''என்னப்பு சிரிக்கிறீங்க..?''

''சிரிக்காம?''

''நான் என்ன கோமாளித்தனமா சோக்கா அடிச்சேன். சிரிக்கிறீங்க...'

''அது சரி. என்ன திடீர்னு அக்கறை?''

''உங்களுக்கு கூடதான் என் பொண்டாட்டி பேர்ல அக்கறை வந்திருக்குது.''

சந்திரன் அதிர்ச்சியோடு அவரைப் பார்த்தான்.

''என்ன பாக்கறீக. எனக்கு தலையெல்லாம் காது...''

''அப்படீங்களா?''

''பெரிய ஹீரோன்ன நினைப்போ?''

''நீங்க வில்லன்னா. நான் ஹீரோதாங்க.''

சந்திரனும் திரும்பினான். ராயர் முகத்தில் அறை விழுந்தது போலாயிற்று. சுற்றி இருப்பவர்கள் கொஞ்சம் குறுஞ்சிரிப்போடு அதை ரசித்தார்கள். ஒருவன் மட்டும் ''ஏய்.. எங்கய்யாவையே எதுத்து பேசரியாக்கும் வெண்ண.



ஒழுங்கா ஊரு திரும்பமாட்டே ஆமா...'' என்று முண்டா தட்டினான். சந்திரன் அசராமல் சிரித்தான்.

''டேய் எல்லாரும் கொஞ்சம் அப்பால போங்கடா...'' ராயர் அவர்களை போகச் சொல்லிவிட்டு சந்திரன் பக்கம் திரும்பினார்.

''ரொம்ப தைரியசாலிதான் நீ...'' என்றார்.

''தேங்க்ஸ். அத ஒத்துக்கறதுக்கு'' என்றான் அவனும்.

''சரி.. நான் சுத்தி வளைச்சு மூக்கத் தொடாம விஷயத்துக்கு வரேன். என் எதுக்க ஒரு பய பேசினது கிடையாது. இருந்தும் உன்னை விட்டு வெச்சிருக்கேன்னா என் கொழுந்தியாளுக்கு என்னை யாருன்ன புரிய வைக்கணுமில்ல. அதுக்காகத்தான்.

இது என் குடும்ப விஷயம். என் கௌரவம் பிரச்சினையும் கூட. இதுல நீ தலையிட்டா நான் மனுஷனா இருக்கமாட்டேன். உனக்கு ஒரு நல்ல விலை தரேன். வாங்கிகிட்டு ஊரைவிட்டே ஓடிப்போயிடு.

புத்திசாலித்தனமா நடந்துக்கோ. எவ்வளவு கேக்றே?''

ராயர் சொல்லிவிட்டு மீசையை நீவிக் கொண்டார். சந்திரன் அதற்கும் சேர்த்து சிரித்தான்.

''என்னவே நான் கெஞ்சாத குறையாக பேசிக்கிட்டிருக்கேன். ரொம்ப எகத்தாளமாக சிரிக்கறே?''

''சிரிக்காம. ஆமா நான் காசு பணத்துல விழுந்திடுவேன்னு எதை வெச்சு முடிவு பண்ணீங்க.''

''ஓஹோ நீ பெரிய சத்யசந்தனோ. அந்த அரிச்சந்திர ஜாதியோ...?''

''வெச்சுக்குங்க. அதுல ஒண்ணும் தப்பு இருக்கறதா எனக்கு தெரியல. நான் வரேன்.''

''நில்லு.. முடிவா என்ன சொல்றே?''

''என் முடிவைக் கூட உங்களால விலைக்கு வாங்க முடியாது. உங்க சாயம் வெளுத்துப் போற நாள் தூரத்துல இல்லன்னு சொல்றேன். வரேன்.''

சொல்லிவிட்டு விறுவிறுவென்று வெளியேறத் தொடங்கினான் சந்திரன்.

கண்கள் சிவக்க பார்த்தபடியே இருந்தார் ராயர்.

அவன் வெளியேறவும் சகாக்கள் வந்து சூழ்ந்து கொண்டார்கள் . அவரையே வெறித்தார்கள்.

''என்னடா பாக்கறீங்க... அவன் வீடுபோய் சேரக் கூடாது...''

''சரிங்க போற வழியிலையே கதையை முடிச்சுப்புட்றோம்.''

''மாட்டிக்காம கதையை முடிக்கணும். அவன் இங்க வந்ததோ போனதோ எதுவுமே யாருக்கும் தெரியக்கூடாது. அது ஒரு ஆக்சிடெண்ட்ன்னு ஊர் நினைக்கணும். குறிப்பாக அந்த குட்டி சீதம்மா நினைக்கணும்.

கைக்கெட்டுனது வாய்க்கு எட்டாம போச்சேன்னு புலம்பி அழுவணும்.''

''சரிங்க...!''

அவர்கள் கிளம்பினார்கள். வெளியே வந்தபோது சந்திரன் தன் ஸ்கூட்டரை உதைத்துக் கொண்டிருந்தான். அது அடம்பிடித்துக் கொண்டிருந்தது. பின் ஒரு வழியாக உதறலெடுத்து கிளம்பியது. பின்னாலேயே தொடரத் தொடங்கியது அவர்களின் சுமோ.

சந்திரனின் நர்சரி கார்டனில் ஏக பரபரப்போடு உட்கார்ந்து கொண்டிருந்தாள் சீதம்மா. கூடவே உட்கார்ந்து கொண்டிருந்தார் அப்பா ஆதிகேசவர்.

ஏகப்படபடப்பில் இருந்தார்.

''தைரியமா இருங்கப்பா... சந்திரன் ரொம்ப தைரியமானவர். தங்கமான மனுஷன். நீங்களும் ஒரு வார்த்தை சொன்னா அவருக்கு இன்னும் சந்தோஷமாவும், தெம்பாவும் இருக்கும்.''

''சொல்றேம்மா... ஆனா ஒண்ணு எந்த தகப்பனுக்கும் இப்படி ஒரு நிலை வரக்கூடாது.''



''போதும். இப்படி சுய பச்சாதாபமே வேண்டாம். இப்ப எதுவும் ஆயிடலை. கடவுள் நம்ம பக்கம் தாம்ப்பா இருக்கார். அதனால்தான் சந்திரனைக் காட்டியிருக்கார்.''

''என்னமோம்மா நீ சொல்றே.. என்னாலையும் ஒண்ணும் சொல்ல முடியல. இரண்டு பேரும் நல்லா இருந்தா சரி.''

''நிச்சயம் நல்லா இருப்போம். தைரியமா இருங்க. நல்லா இருக்கறதும் இல்லாததும் நம் மனசுலதான் இருக்கு.''

ஆறுதலும் தேறுதலுமாக பேசிக் கொண்டிருக்கும் போதுதான் அந்த தொலைபேசி செய்தி வந்தது.

''சந்திரன் நர்சரி கார்டனா...?''

''ஆமாம். என்ன விஷயம்''

''சந்திரன்கறவர் இங்க நடுரோட்ல ஆக்சிடெண்ட் ஆகி செத்துக்கிடக்கிறார். அவர் பாக்கெட்டுல இருந்த விசிட்டிங் கார்டை வெச்சு இந்த தகவலைச் சொல்லிட்டிருக்கோம். வேகமா திருமங்கலம் மெயின் ரோட்டுக்கு வாங்க.''

சீதம்மா கைய்யிலிருந்த ரிசீவர் பொத்தென்று நழுவியது.

''கடவுளே.. இப்படியா உச்சி வரை கூட்டிக் கொண்ட போய் கீழே தள்ளுவாய்.''

கேள்வியோடு மயக்கமும் சேர்ந்தே வந்துவிட்டது.

## 13

**'பொன்னைப் பொன் என்பார்... கண் என்பார்...**
**கவர்ந்திழுக்கும் நிலாவும் அவரென்பார்**
**அவ்வளவும் பேச்சுக்குத்தான்!'**

ஆஸ்பத்திரியில் அறுத்துக் கூறுபோட்டு பின் தைத்து சந்திரனை தந்த போது இருட்டி விட்டது. அவனது இறுதியாத்திரையில் ஒரு மௌனப் புயலாக நடக்கத்

தொடங்கின சீதம்மாவை ஆதிகேசவர் 'அவசரம்' என்கிற மாதிரி அழைத்தார்.

''என்னப்பா?''

''சந்திரன் செத்துட்ட விஷயம் தெரிஞ்சு தேவானை விஷம் குடிச்சுட்டாளாம்!''

''ஐய்யோ.. அவளுக்கு யார் சொன்னது?''

''அதுவா இப்ப கேள்வி புறப்படு...''

அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஆஸ்பத்திரியை அடைந்த போது தேவானைக்கு இனிமா கொடுத்து விஷத்தை வெளியே எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

தலையிலடித்துக் கொண்டார் ஆதிகேசவர்.

''போம்மா. நீயும் உன் திட்டமும். கடவுள் கூட அந்த சண்டாளங்க பக்கமாதான்மா இருக்கார். வா... பேசாம நாமளும் விஷத்தைக் குடிச்சு செத்துவைப்போம்.''

- ஆதிகேவரின் அழுகைக்கு நடுவில் ஒரு அதிசய காட்சி ஒன்று அரங்கேற ஆரம்பித்தது.

''மாமா'' ராயர்தான் அவரை கூப்பிட்டார். ஆதிகேசவர் பயத்தோடு அவரைப் பார்த்தார்.

''தேவானை இப்படி நடந்துக்குவான்னு நான் துளி கூட எதிர்பார்க்கல மாமா.''

ஆதிகேசவருக்குள் ஆச்சரியம் துள்ளத் தொடங்கியது.

''நான் வேற ஒருத்திய கட்டிக்க போறதுனால மனசு உடைஞ்சிட்டான்னு நல்லா தெரியுது. என்ன பண்ணட்டும். எனக்கும் ஒரு வாரிசு வேண்டாமா?''

ராயர் பேசப்பேச ஆதிகேசவர் உருகத் தொடங்கி விட்டார். பாண்டியம்மாள் கூட அடக்கி வாசிக்க ஆரம்பித்தாள்.

''நல்ல வேளை.. என் மருமக ஆண்டவன் கருணைல பொழைச்சிகிட்டா. போயிருந்தா அந்த பாவம் எங்களைல்ல சேர்ந்திருக்கும்.''



சீதம்மாவுக்கு எல்லாமே பெரிய வியப்பாக இருந்தது.

''இதோ பாருங்க. என்னடா இப்படிச் சொல்றேனேன்னு நினைக்காதீங்க. இவ்வளவு ஆனதுக்கு பொறவும் நான் வாய மூடிக்கிட்டிருந்தா அது நல்லது இல்ல.

தேவானைக்கு வெளிய இருந்து ஒருத்தி தனக்கு சக்களத்தியா வர்றது புடிக்கல. அவளாலையும் புள்ள பெக்க முடியாத நிலை. எங்களுக்கோ வாரிசு வேணும். பாலும் திரியாம பானையும் உடையாம நான் ஒரு வழி சொல்றேன். பேசாம சீதம்மாவை என் பையனுக்கு கொடுத்திடுங்க. அக்காவும், தங்கச்சியும் ஒரே வீட்ல ஒற்றுமையா இருந்துக்கட்டும். என்ன சொல்றீங்க?''

பாண்டியம்மாள் பேசும் விதம், தோரணை எல்லாமே புதியதாக அது நடிப்பில்லை எனும்படியாக மிக நியாயமானதாக ஆதிகசேவருக்குப் பட, சீதம்மா பக்கம் திரும்பினார்.

பார்வையே 'வேற வழியே இல்லடா கண்ணு' என்கிற மாதிரி பார்த்தது.

''அப்ப இவங்க நடிக்கறாங்கப்பா.''

''அப்ப முடியாதுங்கறியா?''

''இப்ப என் மனநிலையை கொஞ்சம் யோசிச்சு பாருங்க. அங்க என் சந்திரன் பிணமா கிடக்கறாரு. இங்க அக்கா..இதுவா கல்யாணப் பேச்சு பேசுற நேரம்.''

''முடியும் முடியாதுன்னு சொல்லும்மா. கல்யாணம் எப்போங்கற பத்தி எப்ப வேனா பேசிக்கிலாம்.''

சீதாம்மா தொடர்ந்து மௌனித்தாள். பின் நேராக தேவானையை போய் பார்த்தாள். அவள் இவளைப் பார்த்த நொடி பெரிதாக அழுதாள்.

''எதுக்கு அழுவறே. தற்கொலை கூட உன்னால சரியா பண்ணிக்க முடியலயாக்கா...''

''ஆமாண்டி.. இந்த குடும்பத்துல நான் இன்னும் கஷ்டப்படணும்னு தலைல எழுதியிருக்கான். என்னை

வெட்டியும், விடமாட்டாங்களாம். சாகவும் விடமாட்டாங்களாம். சீதாக்கண்ணு பாத்தியா என் நிலையை நான் அதிர்ஷ்டக் கட்டைடி...''

''சரி சரி.. ரொம்ப அலட்டிக்காதே. உனக்கு எவளோ ஒருத்தி சக்காளாத்திய வர நான் விடமாட்டேன்.''

''அப்ப நீயே வரப்போறியா?''

''ஆமா.. கஷ்டமோ நஷ்டமோ இனி உன் கூட தான்யா...''

அந்த நிலையிலும் தேவானை எழுந்து கட்டிக் கொண்டாள். பார்த்துக் கொண்டே இருந்த ராயர் தனக்குள் சிரித்தார்.

பழம் நழுவிப் பாலில் விழுந்து விட்டது!

மூன்று மாதம் ஓடிவிட்டது.

அந்த மூன்று மாதத்திலும் தேவானையிடம் இருந்து துளிகூட புலம்பலில்லை.

ராயரும், பாண்டியம்மாளும் நிஜமாலுமே மாறி விட்டதாகத் தான் தோன்றியது.

ஆதிகேசவருக்கே ஆச்சரியம் தான்.

சந்தோஷமாக சீதம்மாவுக்கும் ராயருக்கும் நாள் குறித்தார். தேவானைக்கு செய்ததை விட சீர் வகைகளை கூடவே செய்தார்.

''எனக்கு பொறவு எல்லாம் இவங்களுக்கு தானே?'' அதையும் பத்திரத்தில் எழுதி விட்டார்.

ஊர் மெச்சும்படியாக ஒரு நாள் கல்யாணமும் நடந்து முடிந்தது.

முதல் இரவுக்கு ராயர் குற்றாலத்துக்கு சீதம்மாவை கூட்டிக் கொண்டு போனார். கூடவே தேவானையும் போய் அவள் தான் முதலிரவுப் படுக்கைக்கே அலங்காரம் செய்தாள்.

ராயரிடம் குஷி கூரையைப் பிய்த்தது.



முதல் இரவும் ஜோராக நடந்து முடிந்தது. சீதம்மாள் வெட்கம் மேலிட புரண்டு படுக்கவும். அவள் எதிரிலேயே விஸ்கி பாட்டிலை வெளியே எடுத்தார்.

சீதம்மாவுக்கு அதிர்ச்சி நெற்றியில் ஓடியது.

''என்ன கண்ணு பாக்கறே. இது நான் எப்பவும் குடிக்கிறது தான்.''

''திருந்திட்டேன்னு சொன்னதெல்லாம்...''

''அப்பதானே நீ தைரியமா எனக்கு கழுத்த நீட்டுவே...''

''அப்ப எல்லாம் வேஷமா?''

''இவ்வளவு நாளா உன் எதுக்க குடிக்காமலும், அடிக்காமலும் இருந்தேன் பார் அது தான் வேஷம். இது தான் என் ஒரிஜினல் கலர்.''

''அடப்பாவி.''

''என்ன சொன்னாலும் சரி. இனி பருப்பு வேகாது. வாஸ்தவத்திலே உன் மேல எனக்கு ஆசை எல்லாம் கிடையாது. ஆனா உன் அக்காவுக்காக நீ சந்திரன் சாவை பார்த்து ஏகப்பட்ட வேலைங்க செஞ்ச பாரு.. அப்ப தான் உன் மேல எனக்கு ஆசை வந்துச்சு.

ஒரு பொம்பள உனக்கு அவ்வளவு தெரிஞ்சா எனக்கு எவ்வளவு தெரியும்னு காட்ட ஆசைப்பட்டேன்.

உன்னோட சந்திரனை காரைக் கொண்டு மோதி பரலோகம் அனுப்பிச்சதே நான்தான்!''

ராயர் பேசப் பேச சீதம்மாவுக்கு மூச்சிளைத்தது. நெஞ்சம் பதறியது.

''ஆம்பளடி நான்...அதுலையும் மீசை உள்ள ஆம்பள. என்கிட்டையே மோதினியே இப்ப பார்த்தியா?''

மீசையை, நெய்போட்டு வளர்த்த மீசையை நன்றாக நீவிவிட்டபடி கேட்டார் ராயர்.

முறைத்துப் பார்ப்பதைத் தவிர அப்போதைக்கு வேறு வழி தெரியவில்லை.

''நாங்க என்னிக்கும் நாங்கதான். ஞாபகம் வெச்சுக்கோ. ஒழுங்கா அடக்க ஒடுக்கமா நடந்துக்கணும்.''

''என் சக்தி தெரிஞ்சு அனுசரணையாவும், மதிச்சும் நடந்துகிட்டா அது உனக்கும் நல்லது உங்கக்காவுக்கும் நல்லது.''

''இல்லாட்டி உன்னையும் மலடியாக்கிட்டு இன்னொருத்தியை கொண்டுகிட்டு வந்துடுவேன். ஞாபகம் வெச்சுக்க..'' பேசிவிட்டு வெளியே போனார்.

முருகன் வந்திருந்தான். வெளியே போய் ஈஸி சேரில் சாய்ந்து கொண்டவரின் காலை அமுக்கி விடத் தொடங்கினான்.

''நல்லா அமுக்குடா நாயி. அது என்ன பொம்பள மாதிரி ஒரு மாதிரி தொட்டுகிட்டு.. நல்லா அமுக்குடா பொட்டப்பயலே. பொட்டப்பயலே!''

தான் ஒரு ஆண் மகன் என்னும் திமிர், அதைவிட தானே எல்லாம் என்னும் மப்பு. எல்லாம் தொனித்த அந்த குரல் அந்த ரௌத்ரம்.

சீதம்மா வாய்விட்டு கதறத் தொடங்கினாள். அதே வேளையில் நான் இதற்கெல்லாம் சோர்ந்துவிட மாட்டேன். நீ என்னை சிதைப்பதாக நினைத்துக் கொண்டு செதுக்கத் தொடங்கிவிட்டாய் என்கிற புதிய முடிவை எடுத்தவள் அடுத்த க்ஷணமே மாறிப் போனாள்.

வெளியே படுத்திருந்த ராயரை நெருங்கி ஒரு மாதிரிப் பார்த்தாள்.

முருகனும் பார்த்தான்.

''என்னடி பாக்கறே.. என்ன?''

''ஒத்துக்கறேன் நீங்க ஆம்பளதான்!''

''என்ன. என்ன திடீர் ஞானோதயம்.''



''எப்பவாச்சும் அது வந்து தானே தீரணும்!''

''புரிஞ்சா சரி.''

''புரிஞ்சிகிச்சு சாமி. நல்லாவே புரிஞ்சுகிச்சு. எப்பவும் ஆம்பள ஆம்பள தான்! பொம்பள பொம்பள தான்!' சொன்னபடியே.

''முருகா நீ போ. என் புருஷன் காலை நான்தான் அமுக்கி விடுவேன்.'' என்று காலடியிலும் போய் அமர்ந்தாள்.

''என்ன புள்ள. நீ மாறுன வேகத்தப் பாத்தா சந்தேகமா இருக்குதுடி எனக்கு.''

''அதான் தாலி கட்டிட்டீங்கள்ள. நான் எகிறுனா ஆச்சா? அதான் சொல்லிட்டேன்ல. ஆம்பள ஆம்பளதான் - பொம்பள பொம்பள தான்னு.''

சொன்னபடி காலை தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டாள். அமுக்கி விட ஆரம்பித்தாள். ராயரிடம் வெற்றிச் சிகரமே ஏறிவிட்ட உற்சாகம்!

## 14

**'பெண்ணாலே தான் ஆண்மை பெருமை கொள்கிறது!**
**பெண்ணால் அங்கீகரிக்கப்படாத**
**ஆண்மை ஆண்மையே இல்லை.'**

ராயரின் சகாக்கள் அந்த டைலரை தேடிப் போய்விட்டு திரும்பியிருந்தார்கள்.

''தலைவா அவன் நாம் எப்படியும் வருவோம்னு தெரிஞ்சு எங்கையோ ஓடிட்டான்.''

''எங்க ஓடுவான். திரும்ப வராமலா போய்டுவான்.''

''வந்தா இடுப்புக்கு கீழே ஒரே மிதி.''

அப்பொழுது டாக்டர் அழைப்பதாக தகவல் வரவே ராயர் உள்ளே சென்றார்.

படுக்கை அருகே டாக்டர் கஸ்தூரி நின்றபடி இருந்தாள். சுற்றிலும் நர்ஸ், பாண்டியம்மாள், தேவானை என்கிற ஒரு வட்டம்.

''கூப்பிட்டீங்களா?''

''ஆமாம். ஆஸ்பத்திரி.. ஃபார்மாலிடீஸ்னு ஒண்ணு இருக்குல்ல.''

''என்ன பண்ணனும்?''

''பர்த் சர்ட்டிபிகேட் இப்பல்லாம் ரொம்ப முக்கியம். எங்க போனாலும் அதை கேப்பாங்க. அதுக்கு எனக்கு டீடெய்ல்ஸ் வேணும்.''

''என்ன டீடெய்ல்ஸ்?''

''இவங்க பேர். அப்புறம் இவங்க கணவர் பேர், வீட்டு முகவரி. எல்லாம்.''

''அதான் சேக்கும் போதே சொல்லியிருப்போமே - இன்னும் என்ன கேள்வி?''

''இல்ல.. இவங்க வேற ஏதோ சொல்றாங்க.'' டாக்டர் கஸ்தூரி குண்டைத் தூக்கிப் போடாத குறையாக சீதம்மாவைப் பார்த்தாள்.

சீதம்மாவோ, குளித்த மாதிரி பளிச்சென்று இருந்தாள். திடமான சிரிப்போடு டாக்டரை பதிலுக்கு பார்த்துவிட்டு கேட்டாள்.

''உங்களுக்கு இப்ப என்ன தகவல் வேணும்?''

''உன் பேர் என்னம்மா?''

''சீதம்மா.. அப்பா பேர் வேணுமா ஆதிகேசவர்.''

''அதை விட புருஷன் பேர் தாம்மா இப்ப ரொம்ப முக்கியம்.''

''நான் இல்லேங்கலியே எழுதிக்குங்க. என் புருஷன் பேரு வல்லபராயன். ஆனா இந்த குழந்தையோட அப்பா பேர்,'' சீதாம்மா கொஞ்சம் இடைவெளி விட்டவளாக ராயரைப் பார்த்தாள்.



ராயர் வியர்த்திருந்தார்.

''உம் சொல்லும்மா. என்ன பேர்?''

''என்ன கேள்வி என் மகன் பேர் வல்லபராயன். ஜமீன் பரம்பரை'' பாண்டியம்மாள் குரல் இடையில் புகுந்து எதிரொலித்தது.

''நாங்க உங்க மகன் பேரை கேக்கலை. இந்த குழந்தையோட அப்பா பேரைக் கேட்டோம்.''

''அங்க என்ன கேள்வி டாக்டரம்மா, நான் சொல்றேன் இந்த குழந்தையோட அப்பா பேர் சந்திரன்!'' கஸ்தூரி அர்த்தபுஷ்டியுள்ள புன்னகையோடு அதை எழுதிக் கொள்ள ராயருக்கு மீசை துடித்தது.

''ஏய். என்ன சொன்னே?''

எகிறினார். கத்தினார். துடிதுடித்தார்.

''மிஸ்டர். இங்க கத்தற வேலை எல்லாம் வெச்சுக்கக்கூடாது. இது ஆஸ்பத்திரி, முதல்ல வெளிய போங்க. இவங்க கணவர் மட்டும் தான் இங்க இருக்கலாம். எல்லாரும் போங்க வெளிய போங்கன்னா.'' கஸ்தூரி குரலில் ரௌத்ரம் தொனித்தது.

ராயர் நகராமல் அங்கேயே நின்று வெறிக்க, சொல்லி வைத்த மாதிரி இரண்டு போலீஸார் வந்து அருகில் நின்று அவரை ஒரு மாதிரி பார்த்தனர்.

வேறு வழி தெரியவில்லை.

அவரும் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

போகிறவரை கை தட்டி திரும்பக் கூப்பிட்டாள் சீதம்மா.

திரும்பிப் பார்த்தார்.

''மிஸ்டர் ஆம்பள.. பொம்பள நாங்க சொன்னாத்தான் நீங்க ஆம்பள. அப்படி இல்லாத வரை உங்களுக்கு இருக்கற மீசையால மட்டும் நீங்க ஆம்பளையாகிட முடியாது.

ஞாபகம் வெச்சுக்குங்க'' கண்களில் தீர்க்கம் மின்ன பேசியவளை தேவானை கட்டிக் கொண்டாள்.

''கவலைப்படாதே நானிருக்கிறேன்'' என்கிறாப்போல கஸ்தூரியும் பார்த்தாள்.

ராயரால் அதற்கு மேல் அங்கு நிற்க முடியவில்லை. குனிந்த தலையோடு அடங்கி ஒடுங்கி கூனிக்குறுகி நடையிடத் தொடங்கினார். சரீரத்தால் மட்டுமே ஆணாக உள்ள அங்கீகரிக்கப்படாத அந்த ஆம்பளை.

ஓரமாக இருந்து பார்த்துக் கொண்டிருந்த சேடச்சியும், முருகனும் தங்களையும் மறந்து பொங்கிக் கிளம்பிய ஆனந்தக் கண்ணீரோடு அடிமைகள் என்கிற அழுத்தங்களை மீறி சீதம்மாவின் அந்த பதிலுக்காக கைதட்டத் தொடங்கினர்.

முற்றும்